# நுண்தொழில் இளைஞன்






மாணவரவை

தொழில் நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்த்துக்கள்

எத்திசையும் தித்திக்கும் தேன் சிந்தும் ஐஸ்கிறீம்
வகைகள் தயாரிப்பதில் முன்னோடிகள்

RIO

Cream House

றியோ

கிறீம் ஹவுஸ்

75, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்தொழில் இளைஞன்

# YOUTHS' TECH

## 1994-1995

இதழ் ஆசிரியர்
ப. மகேந்திரன்

மாணவரவை
தொழில் நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்

STUDENTS' COUNCIL
TECHNICAL COLLEGE
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வாழ்க வாழ்கவே வளமார் எமது
தொழிற் கூடம் வாழ்க வாழ்கவே....

இலங்கைத் தீவின் இலங்கு யாழ்நகரின்
கலங்கரை விளக்கமாய் கலங்கிருள் துடைத்து
நிலவும் கோயில் நிறையா ஏழையும்
நலம் பெற உதவும் நமது கல்லூரி,

வாழ்க வாழ்கவே

நேயமிகு நியூஸிலாந்து நிதியுதவ நம்மவர்
ஓயாது உழைப்புதவ, உருவெடுத்த நங்காய்
ஆயிரம் தொளாயிரம் ஐம்பதும் எட்டும்
தோயும் ஆண்டு தோன்றிய தங்காய்

வாழ்க வாழ்கவே

கணிதம் மின்சாரம் கட்டடம் தட்டெழுத்து
வணிகம் லோகம் வாய்ந்த சுருக்கெழுத்து
அணிபெறும் எந்திரம் ஆய நற்கலைகள்
அணி செய்யும் எங்கள் தொழிற் கல்லூரி

வாழ்க வாழ்கவே

வேலை பெற்றிட வீடு ஓங்கிட
வாலிபர் நங்கையர் வந்து பணிந்திடும்
கோலக் கலைகள் கொடுத்து உதவிடும்
சீலக் கோவில் செந்தமிழ் வளத்துடன்

வாழ்க வாழ்கவே

ஆக்கியோன் சு. சுந்தரம்பிள்ளை B. O. L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனின் அகத்தே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரயோக எந்திரவியல் | 21 |
| 2. | பிராந்திய அபிவிருத்தி திட்டமிடல் | 23 |
| 3. | நீர் இறைக்கும் இயந்திரம் பேனுதலும், பழுதுபார்த்தலும் | 33 |
| 4. | பெண்களே வழிக்குவாருங்கள் (கவிதை) | 35 |
| 5. | ஆசிரியர் | 36 |
| 6. | பொய்முகங்கள் (சிறுகதை ) | 37 |
| 7. | கண்ணுக்குள் அவள் வடிவம் (கவிதை) | 41 |
| 8. | தொழில் நுட்பமும் கொங்கிறீற்றும் | 43 |
| 9. | விடுமுறையில் வீடு நோக்கி (சிறுகதை) | 47 |
| 10. | மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்டல் | 49 |
| 11. | நீர்ப்பாசனமும் வடிகால் அமைப்பும் | 55 |
| 12. | இன்சொல் வாழ்க்கையின் வெற்றிச்சின்னம் (சிறுகதை) | 59 |
| 13. | பண்பலை ஒலிபரப்பு (F.M.) | 61 |
| 14. | குடிசார் பொறியியல் | 63 |
| 15 | MOTIVATION | 71 |
| 16. | MICRO PROCESSOR | 87 |
| 17. | ENGLISH FOR SPECIFIC PURPOSES | 88 |
| 18. | THE TOURIST IN DUSTRY IN SRI LANKA | 91 |
| 19. | WHILE FLAG | 92 |
| 20. | THE NEED FOR ENGLISH AND MORE ENGLISH | 93 |
| 21. | STRANGE ACT | 94 |
| 22. | THE RISING TIDI OF ALCOKALISM IN JAFFNA | 95 |
| 23. | THE WORLD IN 2000 A.D | 97 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண் தொழில் இளைஞன்
சஞ்சிகைக்குழு 1994 / 1995

தலைவர்
**ப. மகேந்திரன்**

செயலாளர்
**க. நேத்திரானந்தன்**

துணைச்செயலாளர்
**சோ். சேரன்**

விளம்பரப்பொறுப்பாளர்
**கு. மதிவதனசர்மா**

உள்ளகக்கணக்காப்பாளர்
**இ. பிரபோசங்கர்**

ஒருங்கிணைப்பாளர்
**றஞ்சித்**

உறுப்பினர்கள்
**செ. மகிழ்ராஜன்**
**ம. மைதிலி**
**க. சிவாஜினி**
**கு. கீர்த்திகணேசன்**
**வை. சத்தியராஜ்**
**கி. துஷ்யந்தன்**
**வே. சேந்தன்**
**பிரதீபன்**
**சுகிர்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அமைப்புப் பொறுப்பாளரின் ஆசியுரை



எந்தவொரு நாடும் கல்வியால் உன்னத இலக்குகளை எய்த வேண்டுமாயிருந்தால், அக்கல்விகளில் செயல்த்திறன்கள் சேர்ந்திருப்பது அவசியமாகின்றது. செயற்றிறன் என்பது உடலியல் ரீதியாகவும், எண்ணங்கள் ரீதியாகவும் நுட்பங்களைப் பெருக்கி; அவற்றைக் கொண்டு வாழ்நெறியை வளமாக்கும் தன்மையென்றும் கூற முடியும். இன்னொரு விதத்தில் தனிமனிதனையும் சமூகத்தையும் அதனூடு நாட்டையும் அபிவிருத்திப் பாதைக்கு உந்தித்தள்ளும் நுட்ப வளர்ச்சிகளே செயற்றிறன்களாக பரிணமிக்கின்றன என்றும் கொள்ள முடியும். இன்று எம்மண்ணும் வேண்டி நிற்பது செயற்றிறன் மிக்க தொழிற்பாடுகளையே என்பதனால், அவற்றுக்குத் துணைபோகக் கூடிய தொழில்நுட்பக்கல்லூரிகளின் வளர்ச்சி நிலைகள் அவசியமாகின்றன.

உலகிலே இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளாகக் கருதக்கூடிய எந்த நாடுகளை எடுத்துக் கொண்டாலும், அவற்றின் அபிவிருத்தியின் அடிநாதமாக இருப்பது விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியே என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். 15 ம் நூற்றாண்டின் பின் ஐரோப்பாவின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினால் தான் கீழைத்தேயங்கள் வென்றெடுக்கப்பட்டன. விஞ்ஞான தொழில் நுட்பம் பீரங்கியைத் தீர்த்த போது, வாள்களும், வில்களும், வலுவற்றுப் போகவே நாடுகள் நசிய நாங்களும் நசிந்தோம். மறுதலையாக, நாங்கள் இங்கு நிமிர விரும்பினால் விஞ்ஞான தொழில்நுட்ப செயற்றிறன்கள் வளர வேண்டும். உலக யுத்தத்தின்போது அணுக்குண்டால் அழிவுற்ற ஜப்பான் நாடு இன்று நிமிர்ந்து நிற்கின்றதென்றால் அங்கு முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிதான் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ நாடும் விடிகின்ற போது அதன் பொருளாதாரப் பலம் உயர்ந்திருந்தால் தான் மக்கள் மகிழ முடியும். இப்பொருளாதார பலத்தை உயர்த்துவதாக இருந்தால் இம்மண்ணின் வளங்களைப் பயன்படுத்தி செழிப்பை வரவழைக்கும் தொழில்நுட்பத் திறன்கள், எல்லாத்துறைகளிலும் உயர்வாயிருக்க வேண்டும். எங்களின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கூறியுள்ள "எமது மண்ணில், எமது கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான வாழ்வை நாம் கட்டியெழுப்ப வேண்டும். இது இன்றைய வரலாற்றுத் தேவையும் கூட" என்பதை தொழில்நுட்ப சமுதாயம் விளங்கிச் செயற்பட வேண்டும்.

தமிழீழத்தைப் பொறுத்து தொழில் நுட்பக் கல்லூரிகளின் அளவுகளும் வசதிகளும் போதியதாக இல்லையென்பது உண்மையே. இதற்கு பலவிதமான அரசியல் பொருளாதாரக் காரணங்கள் இருக்கின்றன. இருப்பினும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரி தன்னால் இயன்றளவு எமது மாணவரின் தொழில்நுட்பத் திறனை வளர்த்து வருகின்றதென்பதையும் மறுப்பதற்கில்லை. இதன் விளைவாகத்தான் இங்கு கற்கும் 'மாணவர் அவை'யும் தம் செயற்பாடுகள் பலதில் அக்கறையாக இருப்பதைக் காண முடிகிறது. அதன் ஒரு கூறாகவே "நுண்தொழில் இளைஞன்" என்னும் சஞ்சிகையின் 10 வது மலரை தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர் அவை இவ்வருடம் தர இருக்கின்றது.

முன்புபோல பல நல்ல ஆக்கங்களை தாங்கி வருவதன் மூலம் "நுண்தொழில் இளைஞன்" சிறக்க வேண்டுமென்று வாழ்த்துவதோடு, இவ்விளைஞனால் பல இளைஞர்கள் உரம் பெற வேண்டும் என்று எமது அவாவையும் தெரிவித்துக் கொள்கிறேன். மண்ணை நேசித்து, மண்ணுக்கு மதிப்பளித்து, மண்ணுக்காய் தொழில் புரியும் நுண் தொழில் இளைஞர்களாய் மாணாக்கர் மாறும்போது எம் மண் செழித்திருக்கும், நாமும் சிரித்திருப்போம்.

நன்றி

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

இப்படிக்கு
ந. இன்பன்
பொறுப்பாளர்
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு,
நடுவப் பணியகம்,
தமிழீழம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE



## MESSAGE FROM K. KALUARACHCHI
## ( Actg ) DIRECTOR GENEREAL DEPARTMENT OF TECHMICAL EDUCATION & TRAINING

Indeed I consider it as a great previledge in issuing the Message off elicitation to the Magazine "Youth Tech" published by the Students' Council of the Jaffna Technical College. I congratulate the organizers for their enduring efforts in bringing forth a magazine of this nature. The Technical Colleges and the Affiliated Technical Units located through the country are providing varieties of technical and vocational training courses catering to the students with different abilities, aspirations and qualifications. There is hidden potential in the growing youth of the present generation living in the length and breadth of this country. Their abilities, creativeness and initiative should be encouraged, rewarded and recognized, in addition to training them in a particular trade or skill. One of the ways of exhibiting their creativeness and talent is themselves publishing a magazine of this type. This effort also provide them an opportunity of learning the process, experience and intricacies of organization and leadership.

Therefore the endeavor of the Jaffna Technical College Students' Council of publishing the 'Youth Tech Magazine' deserve the appreciation, encouragement and support of all.

I also take this opportunity to thank the Principal and the Staff for the guidance and co-operation rendered towards the publication of this magazine.

**K.KALUARACHCHI**
**ACTG. Director General**
**Department of Technical Education & Training**
**6th December, 1994**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAGAZINE ADVISORY COMMITTEE

| | | |
|---|---|---|
| 1. | Mr. T. Kailainathan | (Head of English) |
| 2. | Mr. V. S. Keetha Pongalan | (Head of Diploma) |
| 3. | Mr. S. S. Pooranampillai | (Head of Engineering) |
| 4. | Mr. Rajaratnam | (Head of Certificate) |
| 5. | MrS. E. N. Soundram | (English) |
| 6. | Mrs. S. S. Suntharampillai | (Tamil) |
| 7. | Mr.S. Umakanthan | (Senior lecturer |
| 8. | Mr. K. Jejaratnam | (Principal) |
| 9. | Mr.M. Srivickneswaran | (V.P) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *OUR PRINCIPAL*



*MR. K. JAYARATNAM*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE

## MESSAGE FROM PRINCIPAL
## TECHNICAL COLLEGE, JAFFNA.

I am very happy and delighted in giving this message of felicitation, congratulation and appreciation to the "YOUTH TECH" magazine published by the Students Council of our College.

It is really commendable that they are publishing this magazine in the midst of hardship and difficulties they are undergoing in obtaining money and materials. The difficulties they are confronted with not only in obtaining resources for the publication but also in their day to day living.

It is due to their courage and determination that they are successfully bringing out this publication.

**K. JAYARATNAM**
**Principal**
**Technical College, Jaffna.**
**03-02-1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE



## MESSAGE FROM HON. MAHINDA RAJAPAKSE
## MINISTER OF LABOUR & VOCATIONAL TRAINING

I am pleased to issue this message to the Magazine published by the Students' Council of the Jaffna Technical College. I have been informed that this is the 10th issue of the "Youth Tech" Magazine. It contains articles written by students and lecturers of the Technical College.

The Students' Council of the Jaffna Technical College should be congratulated for this publication. I wish them all success in their future endeavours.

**Mahinda Rajapakse**
**MINISTER OF LABOUR & VOCATIONAL TRAINING**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அதிபர் ஆசி உரை.



இலங்கைவாழ் தமிழ் மக்களுக்காக நியூசிலாந்து அரசாங்கத்தினால் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாக அன்பளிப்பு செய்யப்பட்ட இந்த நிறுவனம் 1959ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் தொழிற் கல்விக்கோர் கலங்கரை விளக்கமாகதிகழ்கிறது. ஆரம்பத்தில் சில நூறு மாணவர்களை பயிற்று வித்த யாழ். தொழில் நுட்பக் கல்லூரி பின்பு பல் தொழில் நுட்ப நிறுவனமாக வளர்ச்சி பெற்று இன்று பல பயிற்சி நெறிகளை போதிக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களைத் தன்னகத்தே கொண்ட ஓர் பெரிய தொழில் நுட்பக் கல்லூரியாகத் திகழ்கின்றது.

அன்று தொடக்கம் இக்கல்லூரியில் பல மாணவ மன்றங்கள் தொடங்கி அவர்களின் அரிய முயற்சிகளால் "நுண்தொழில் இளைஞன்" என்ற கல்லூரி நூல் 9 தடவைகள் வெளியிடப்பட்டன. 1990 /91 இல் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிய "மாணவர் அவை" என்ற மாணவர் அமைப்பு உருவாகியது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற முதுமொழிக்கிணங்க இப்பேரவை உருவாகிய பின்பு இக்கல்லூரியில் விளையாட்டுப் போட்டிகள், விழாக்கள், கருத்தரங்குகள் என்பன மாணவரின் நலனையும் திறனையும் விருத்தி அடையச் செய்வதுடன் கல்லூரியின் பெயரையும் பிரபல்யமாக்கின. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல் 94/95 வருட மாணவ அவையினர் அண்மையில் மாபெரும் கலை நிகழ்வு ஒன்றை நடாத்தி, அதில் இருந்து பெற்ற வருவாயை பயனுள்ள முறையில் நுண்தொழில் இளைஞன் எனும் இவ்விதழை வெளியிட பயன்படுத்தியுள்ளனர்.

இளமைக்காலம் பொன்னானது. இத் தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்த இளைஞரும், யுவதிகளும் தங்களுக்கு கிடைத்த இவ்வரிய சந்தர்ப்பத்தை தொழிற் கல்வியிலும், கல்வி சம்பந்தப்பட்ட இது போன்ற விடயங்களிலும் பிறருக்கு உதவும் பொதுப்பணிகளிலும் செலவிட்டு தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், நாட்டையும் முன்னேற்றி பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது ஆசியுரையை முடிக்கின்றேன்.

**எம். விக்னேஸ்வரன்**
உபஅதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரிப் பதிவாளரின் ஆசியுரை



எமது தொழில் நுட்பக் கல்லூரியின் பாரம்பரிய சஞ்சிகையான "நுண்தொழில் இளைஞன்"இன்று தனது பத்தாவது மலராக வெளிவருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று உங்கள் கைகளில் தவழும் இச்சஞ்சிகையானது எமது கல்வி நிறுவனத்தின் சகல துறைகளைச் சார்ந்த மாணவர்களினதும் ஒரு ஒட்டு மொத்தமான கூட்டு முயற்சியின் பெறுபேறாகும். எனவே இக்கல்வியகத்தில் ஊற்றெடுக்கும் சகல துறை சார்ந்த வல்லுனர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு கட்டுரைகள் ஆக்கங்களைத்தாங்கிய இவ்வெளியீடு எமது கல்லூரியின் செயற்பாட்டுத் திறனையும் கல்விப்பணியையும் காலவோட்ட ரீதியாக வெளிப்படுத்தும் ஒரு கருவியாக அமைந்திருக்கின்றது.

இச்சஞ்சிகை வெளியிடும் பணியானது காலத்திற்குக் காலம் புதுப் பொலிவுடன் தொடரப்பட வேண்டும் என்று இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**எஸ். கமலேஸ்வரன்.**
பதிவாளர்,
யாழ். தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஸ்ட பொருளாளரின் ஆசியுரை



எமது கல்லூரியின் மாணவர்களால் வெளியிடப்படும் "நுண்தொழில் இளைஞன்" என்ற பத்தாவது சஞ்சிகையான இவ்இதழை வெளியிடுவதற்கு மாணவர் அவையின் சஞ்சிகைக் குழுவானது பெரும் சிரமங்களை எதிர்நோக்கியது. ஆனாலும் இவ்வளவு சிரமங்களின் மத்தியில் இதனை வெளியிடுகின்றது. இதன் ஒன்பதாவது வெளியீடானது 1989இல் வெளியிடப்பட்டது. இவ் இதழானது நீண்ட இடைவெளியின் பின்னால் வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகையானது ஒவ்வோர் துறைகளைச் சார்ந்த விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்களை பொறிக்கப்பட்டனவாக திறமையாக வெளியிடப்படுகின்றது. இச்சஞ்சிகையின் வெளியீடானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல ஆண்டவனின் பாதங்களை நாடி ஆசிகூறுகின்றேன்.

மாணவர் அவை
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**எஸ். எஸ். பூரணம் பிள்ளை**
சிரேஸ்ட பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவரவை தலைவரின் பேனாவிலிருந்து ..........



யா/தொழில் நுட்பக்கல்லூரியின் மாணவரவையாகிய நாம் நீண்ட இடைவெளியின் பின் எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் "நுண் தொழில் இளைஞன" என்னும் இந்நூலை உங்கள் கரங்களில் தவழ விடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

உங்கள் கைகளில் தவழ்ந்து இன்புறச் செய்யும் இன்றைய இக் கலை வடிவமானது இன்றைய இக் கட்டான சூழ்நிலையில் ஒரு குழந்தையைப் பெறும் தாய் எவ்வளவு சுமைகளையும் பிரசவ வேதனையையும் தாங்கி அழகான குழந்தையைப் பிரசவிக்கிறாளோ அதே போன்று தான் எமது அவையின் இம் மலர் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

நீண்ட இடைவெளிக்குப்பின் வெளிவரும் இச்சஞ்சிகையானது மாணவர்களின் விரிவுரையாளர்களின் ஆக்கங்களைத் தாங்கியும் இன்னும் பல ஆக்கபூர்வமான விடயங்களையும் உள்ளடக்கி வெளிவருவது இந்நூலுக்கு மென்மேலும் மெருகூட்டுகிறது.

மேலும், எமது தமிழ் மண்ணைப் பொறுத்தவரை அது இலங்கைத் தீவின் தலை என்றும் அறிவு நிறை அறிஞர்களையும், கற்றோரையும் கொண்ட கல்வித் திடல் என வர்ணிக்கப்பட்டாலும் தற்போது இங்கு தமிழ் மொழி மூலம் நூலுருப் பெறும் நூல்கள் மிக அரிதாகவே இருக்கிறது. இப்படியான சஞ்சிகைகளை வெளியிடுவதற்கு இங்கு தற்போது பெருந்தொகைப் பணமும் பல இன்னல்களையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது. எனவே எம்மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் சமுதாய எழுச்சிக்கும் எமது மொழிக்கு வளம் சேர்க்கவும் பல தியாகங்களைப் புரிய வேண்டியுள்ளது. இந்தவகையில் எம்மவையின் இந்நூல் எம் மண்ணை முத்தமிடுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

இந்நூல் வெளியிடுவதற்கு எமக்கு ஏற்பட்ட பல சொல்லொணா இடையூறுகளையும், இன்னல்களையும் தீர்த்துக் கொள்வதற்கு தங்களது நேரத்தையும் சிரமத்தையும் பாராது எந்தெந்த வழிகளில் உதவி புரிய முடியுமோ அந்தந்த வழிகளில் உதவி புரிந்த எம்மவையினரையும் மறக்க முடியாது.

அன்புடன்,
ந. சுதாகர்
தலைவா.

மாணவரவை,
தொழில் நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் அவையின் மூன்றாம் ஆண்டு நிறைவின் ('94 – '95) செயற்திட்டங்கள்

*- ஓர் கண்ணோட்டம்*

எமது அவையின் செயற்காலம் 1994/1995 என்ற ஓராண்டு காலப்பகுதியாகும். இதற்கு முன்பு இரண்டு மாணவர் அவைகள் செயற்பட்டன. இதில் மூன்றாவதாக செயற்படுவதே எமது அவையாகும். இதற்கு முன்பு இருந்த பல மாணவர் அவை உறுப்பினர்கள் அரும் பெரும் செயற்திட்டங்களை நிறைவேற்றினர். இந்த வகையிலும் எமது காலப்பகுதி அவையும் பல அமைப்புக்களாலும், மன்றங்களாலும் புகழாரம் கூறக் கூடிய வகையில் பல செயற்பாடுகளில் ஈடுபட்டு இறுதியாக "நுண் தொழில் இளைஞன்" என்ற பத்தாவது சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது அவைக்கு 01–07–94இல் முன்னாள் செயலாளரினால் ஆவணங்கள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து எமது செயற்பாடுகள் ஆரம்பமாகின. எமது அவையின் முதலாவது செயற்குழுக் கூட்டமானது 27–07–94இல் நடைபெற்றது. எமது செயற்பாட்டுக் காலத்தில் கல்லூரியில் பல கலை விழாக்களும், பூஜை விழாக்களும், நினைவஞ்சலிக் கூட்டங்களும், சிரமதானங்களும் மேற்க் கொள்ளப்பட்டன.

எமது அவையின் உறுப்பினர்களில் தலைவர், செயலாளர், பிரதிச்செயலாளர், சஞ்சிகை ஆசிரியர், விளையாட்டுக்குழுச் செயலாளர் போன்ற முக்கியமான பதவிகள் 16,18 யூன் 1994களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக எமது உறுப்பினர்கள் போட்டியிட்டு உரிய பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இதில் பொருளாளராக இ. பரணீதரன் அவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். சஞ்சிகை ஆசிரியராக மு. பூலோகராஜா தெரிவு செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் தவிர்க்கமுடியாத காரணத்தால் தமது பதவிகளை இராஜினாமாச்செய்தார்கள். பிரதித் தலைவராக மு. அனந்தகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டார். இவரும் தவிர்க்கமுடியாத காரணத்தால் தமது பதவியை இராஜினாமாச் செய்தார். இவர்களின் இராஜினாமாவின் பின்னர் புதிய உறுப்பினர்கள் இப்பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு எமது செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

எமது அவைக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு எம்மால் 15–10–94 அன்று ஓர் கலைவிழா நடாத்தப்பட்டது. இதில் கலாசேஸ்திர மாணவிகளின் நடன நிகழ்ச்சி, அமரர் சாண்டோ M. துரைரட்ணம் என்பவரின் மாணவர்களினால் "மாபெரும் வீரதீரச்செயல்கள்" என்ற நிகழ்வும், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் தயாரிப்பில் உருவான "எந்தையும் தாயும்" என்ற சமூக நாடகமும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வுகளில் பங்குபற்றிசிறப்பாக நடைபெற உதவியமைக்கு அவ்வவ் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும், எமது கல்லூரி மாணவர்கட்கும் நன்றியைக் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இவ்விழாவைச் சிறப்பாக நடாத்துவதற்கு பலர் எமக்கு தோழோடு தோழாக நின்று செயற்பட்டார்கள். இவர்களில் குறிப்பாக முன்னாள் சஞ்சிகை ஆசிரியருக்கும், சஞ்சிகைக் குழுவிற்கும் நன்றி கூற வேண்டிய கடமைப்பாட்டை நாம் என்றும் கொண்டுள்ளோம்.

எம்மால் மேற்க் கொள்ளப்பட்ட பூஜை விழாக்களில் "நவராத்திரிவிழா" மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகள் எம்மால் நடாத்தப்பட்டன. அத்தோடு கிருஷ்தவ மாணவர் மன்றத்தினரால் மேற்க் கொள்ளப்பட்ட "ஒளிவிழா" விற்கும் எம்மால் நிதி உதவி வழங்கி அவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற உதவிகள் வழங்கினோம்.

அத்தோடு பல நினைவஞ்சலிகளும், நினைவஞ்சலிக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. இதில் பல பெரியார்கள் நினைவுரைகளை வழங்கினார்கள். இவற்றோடு எமது செயற்பாடுகள் நின்று விடவில்லை. "சுத்தம் சுகம்தரும்" என்ற முது மொழிக்கு இணங்க எமது கல்லூரியின் சுற்றுப் புறச் சூழலையும் மைதானத்தையும் சிரமதானம் என்ற பெயரில் சுத்தம் செய்தோம். இவ்வாறு நாம் மேற்கொண்ட இந்தச் சிரமதானத்திற்கு எமது கல்லூரியின் மாணவசமுதாயத்திற்கு நன்றி கூற வேண்டிய ஓர் கடமைப்பாட்டில் உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு "மண்வளம் காப்போம் மரங்களை நாட்டுவோம்" என்பதற்கிணங்க பல நிழல் தரும் மரங்கள் எமது கல்லூரியில் எம்மால் நாட்டப்பட்டன. இவ்வாறு எமது செயற்பாடுகள் எமது கல்லூரியில் வீறு நடைபோட்டுக்கொண்டு இருக்கின்ற சமயத்தில் மாணவர்கள் பலர் தங்களது கல்வி சம்பந்தமாகவும் எமது கல்லூரி சம்பந்தமாகவும் பல புகார்களை எமக்குத் தெரிவித்தார்கள். இவ்வாறான பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி எமது அமைச்சருடன் தொடர்பு கொள்வதென்று எமது செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி எமது அவையின் தலைவரும், பிரதிச் செயலாளரும் கொழும்பிற்குப் போவது என முடிவு எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் எமது கல்லூரியில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள், மாணவர்களின் பரீட்சைப் பிரச்சினைகள், எமது அவையின் அடிப்படை பிரச்சினைகள் என இருபது அம்சங்கள் அடங்கிய மகஜர்கள் நாட்டின் ஜனாதிபதி, பிரதம மந்திரி உட்பட ஆறு அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டது.

இவ்வாறு அனுப்பப்பட்ட மகஜர்களில் தொழில் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் அவர்களிடம் மகஜர் நேரடியாகக் கையளிக்கப்பட்டது. எமது திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. கே. களுவாராட்சி எம்மால் கொடுக்கப்பட்ட மகஜருக்கு பின்வரும் உறுதி மொழிகளைத் தெரிவித்தார்.

இதன்படி,

1. எமது கல்லூரிக்கு அதிபர் நிரந்தரமாக இவ் வருடத்தில் நியமிக்கப்படுவார்.
2. கல்லூரியிலிருந்து சான்றிதழ்களுடன் வெளியேறும் மாணவர்கட்கு அவரவர் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்புக்கள் வழங்குதல்.

3. கணணிவசதிகளுக்கு (Computer) முழுமையான செயல்திட்டத்தினை இவ்வருடம் மேற்கொள்ளல் இவற்றில் உடனடியாக கணணி இயந்திரங்களும் இரண்டு இயந்திர தட்டச்சும் வாங்க கல்லூரியின் அதிபருக்கு அனுமதி வழங்குதல். மேலும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் உதவிப்பணக் கொடுப்பனவுகள் எமக்கும் தரும்படி கேட்டதிற்கு இதில் பெரும் நிதியை அளித்து வரும் "கனடாவின் ஆதரவுடன் நடாத்தப்படும் பல்கலைக் கழக சேவைநிறுவனம் " (WORLD UNIVERSITY SERVICE OF CANADA) உடன் தொடர்பு கொள்ளுமாறு கூறப்பட்டது மேற்படி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டதிற்கு நாம் எல்லாத் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும் உதவிகள் வழங்கிவருகின்ற நேரத்தில் எங்களது கல்லூரிக்கு வழங்காததிற்குக் காரணம் அவர்கள் உள்நாட்டு யுத்தத்தை காரணமாகக் கொண்டு எமது கல்லூரியைப் புறக்கணிக்கப்பட்டது என்றும் இவ்வாறு எமது கல்லூரி யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிரமத்தின் மத்தியிலும் இயங்கி வருவது தங்களுக்குத் தெரியாது என்றும் இவை தொடர்பான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படும் என்றும் கூறினார்கள். எமது கல்லூரிக்கு நேரடியாக வருகை தர வேண்டும் எனக் கேட்டதிற்கும் அவர்கள் சம்மதித்தார்கள்.

எமது கல்லூரியின் கட்டிடங்களை விஸ்தரிப்பதற்கு ஏனைய செயற்பாட்டுக்குமாக இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட நிதியின் விபரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| புதிய கட்டிடங்கள் அமைப்பதற்கு | 5 மில்லியன் ரூபா |
| தற்போதைய கட்டிடங்களைத் திருத்துவதற்கு | 2 மில்லியன் ரூபா |
| இயந்திர உபகரணங்கள் வாங்குவதற்கு | 5 மில்லியன் ரூபா |
| புதிய தளபாடங்கள் வாங்குவதற்கு | 1.5 லட்சம் ரூபா |
| நூல் நிலையத்திற்கு நூல்களை வாங்குவதற்கு | 1.5 லட்சம் ரூபா |

இவ்வாறு எம்மால் முன்வைக்கப்பட்டு அனுப்பப்பட்ட அம்சங்களை அரசும், அமைச்சும் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது என்பது இதன் மூலம் தெரியவந்தாலும் இவற்றின் செயற்பாடுகள் யாவும் இவ்வருடத்தினுள் பூர்த்தியாக்கப்படுமென்பது எமக்கு பெரிதும் நம்பிக்கையைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே எம்மால் கொடுக்கப்பட்ட மகஜரில் ஒன்று நாட்டின் பிரதம மந்திரிக்கும் அனுப்பப்பட்டது. இம் மகஜருக்கு பிரதம மந்திரியின் செயலாளர் எமக்கு 19-12-94 அன்று திகதியிட்ட கடிதத்தில் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துள்ளார். அதாவது நாம் அனுப்பிய மகஜர் தொடர்பாக கல்வி உயர்கல்வி அமைச்சுக்கு அறிவித்து உரிய நடவடிக்கை உடனே எடுக்குமாறு பணிக்கப்பட்டதாகவும் இவை தொடர்பான முடிவுகள் எமக்கு அறிவிக்கப்படும் என்றும் பிரதமமந்திரியின் செயலாளர் எமக்கு கடிதத்தில் அறியத்தந்துள்ளார்.

இவ்வாறு நாம் எமது காலப்பகுதியில் விளையாட்டுத்துறைக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு கொழும்பில் மஸ்கன் கம்பனியுடன் தொடர்பு கொண்ட போது விளையாட்டுப் பொருட்களை வாங்குவதற்கு ஒரு தொகுதி நிதியுதவியை எமக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். இத்தொகையைப் பயன்படுத்தி உரிய விளையாட்டுப் பொருட்களை வாங்குவதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இந்நிதியுதவியைப் பயன்படுத்தி எமது விளையாட்டுத் துறை மேலும் மேலும் வளர்ச்சியடையும் என்பதில் ஐயம் இல்லை.

எமது அவை எதிர் நோக்கிய முக்கிய பிரச்சினைகளில் முக்கியமான பிரச்சினையாக் காணப்பட்டது எமது அவைக்கென ஒரு தனியான நடைமுறைக் கணக்கு ஒன்று திறக்கப்படாமல் இருந்தமை. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இலங்கை வங்கியில் 10-01-95 எமது அவைக்கென ஓர் நடைமுறைக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலமே எமது பெருந் தொகைக் கொடுக்கல் வாங்கல்கள் இன்று இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இவ்வாறே எமது செயற்பாடுகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற சமயத்திலேயே இச் சஞ்சிகையான "நுண் தொழில் இளைஞன்" என்ற சஞ்சிகையும் வெளியிடப்படுகின்றது. இந்தச் சஞ்சிகையானது எதிர்காலச் சந்ததியினருக்கும் பயன் பெறக் கூடிய வகையில் அமைப்பதற்கு உதவிய எமது சஞ்சிகை ஆசிரியருக்கும், சஞ்சிகை குழுவிற்கும், சஞ்சிகை ஆலோனை குழுவிற்கும், செயற்குழு உறுப்பினர்கட்கும் நன்றி கூறுவதில் மாணவரவை ஆகிய நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இவற்றோடு எமது அவையின் செயற்பாடுகள் வெகுசிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய கல்லூரியின் அதிபர், உபஅதிபர், சிரேஷ்டபொருளாளர், கல்லூரியின் விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்லூரியின் ஊழியர்கள், மாணவர்கள் எல்லோருக்கும் நன்றியைக் கூறுவதில் பெருமையடைகின்றோம்.

எமது அவையானது வரும் காலத்தில் மேலும் பணிகளை ஆற்றி சிறப்பு மிக்க உன்னத நிலையை வருங்காலங்களில் உருவாக்கவேண்டுமென வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி.

**கு. வின்சன்**
**செயலாளர்**

**மாணவரவை,**
**தொழில்நுட்பக்கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**
**30-01-1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழ் ஆசிரியரின்



## இருந்து ....

எமது கல்லூரியின் பத்தாவது மலராக "நுண் தொழில் இளைஞனை " உங்கள் கரங்களில் தவழவிடுகின்றேன்..

இம்மலர் 1962/63ம் கழகவாண்டில் நுட்பம் ஒன்று என ஆரம்பித்து நுட்பம் ஒன்பது வரை 1989ல் வெளியிடப்பட்டு வந்துள்ளது. இம்மலரின் தொடர்ச்சியாக 1994/95ல் நுட்பம் பத்தாவதாக வெளியீடு செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகைக் குழுவானது எமது கல்லூரி மாணவர்களின் ஒற்றுமையை வெளிபடுத்தி நிற்கிறது.

இம் முயற்சிக்கு உந்துதலாக இருந்த அதிபர், உபஅதிபர், விரிவுரையாளர்கள் ஆகியோரதும் ஆலோசனைக்குழுவினரது ஆலோசனையும், ஊக்குவிப்பும், தோழோடு தோழ் நின்று உதவிய மாணவர் அவையினர், மாணவர்கள், மாணவர் அமைப்பினர் ஆகியோரது ஒத்துழைப்பும் பேருதவியாக அமைந்த குறிப்பிடத்தக்கது.

அத்துடன் குறிப்பிட்ட காலத்தில் பிரசுரிக்கத் தேவையான ஆக்கங்களை எழுதி உதவிய மாணவர்கள், விரிவுரையாளர்கள், தரமானவற்றை பரிசீலனையின் பின் தெரிவு செய்துதவிய ஆலோனைக் குழுவினர், விளம்பரங்களை தந்துதவிய வர்த்த கஸ்தாபனத்தினர் இந் நூலை மெருகூட்டுவதற்கு கொழும்பு சென்று அச்சிடுவதற்கு உதவிய மாணவர் அமைப்பினர், மாணவர் அவையினர், அதிபர் ஆகியோருக்கும் குறுகிய காலத்தில் தன்னுடைய சிரமத்தையும் பாராது எமக்கு இந் நூலை அச்சிட்டு தந்த அன்புக்குறிய திருச்செல்வம் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு இந் நூலில் குறைகள் ஏதும் இருப்பின் பெருமனத்துடன் மன்னித்துக்கொள்ளவும்.

நன்றி.

மாணவர் அவை
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

*ப. மகேந்திரன்*
சஞ்சிகை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி வெளியீடுகள்

★ இலகு தமிழ் இலக்கணம்
ஆண்டு 6-11 வரையான மாணவர்களுக்கானது
ஆக்கம்: வே. நவமோகன்
(மூன்றாம் பதிப்பு) விலை: 25.00

★ ஒத்த கருத்துச் சொற்களும், எதிர்க் கருத்துச் சொற்களும்
ஆண்டு 5-11 வரையுள்ள மாணவர்களுக்கு ஏற்றது
தொகுப்பு: வே. நவமோகன் விலை: 28.00

★ மாற்றம் - முத்திங்கள் சஞ்சிகை
ஆசிரியர்: யாதுமூரான் விலை:15.00

★ இமயவரிகள் (கவிதைத் தொகுப்பு) (அச்சில்)

★ இலகு ஆங்கிலம் (ENGLISH MADE EASSY)
பதிப்பாசிரியர்: வே. நவமோகன்
(இரண்டாம் பதிப்பு) (அச்சில்)

**வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு**

**காயத்திரி வெளியீட்டாளர்,**
**37/3, கால்சு காடீன்,**
**கொழும்பு - 10.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயோக எந்திரப் பொறியியல்

சா. சக்திதாசன்
பகுதிநேர விரிவுரையாளர்
யாழ் . தொழில்நுட்பக்கல்லூரி
எந்திரப்பொறியியலாளர்
காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் ஐம்பெரும் பூதங்களின் ஆற்றல்களையும் மனித சமுதாயத்திற்கு இவற்றை எங்ஙனம் எப்போது பயன்படுத்தலாம் என்பதனையும் எடுத்துக்கூறும் பௌதியவியலின் ஒரு பிரிவு தான் பொறியியலாகும். பொறியியல் என்பது பொறிகளின் பயன்பாடும் செயற்பாடும் பற்றிய அறிவியல் ஆகும். பொறிகளை உருவாக்குதல் அவைகளைச்சீர்படுத்துதல் பராமரித்தல் உபயோகித்துப்பயனடைதல் என்பன பற்றிப் பொறியியல் கூறும். பொறிகளைப் பயன்படுத்தி அதிக பட்ச பயனைப்பெறுவதன் மூலம் மனிதவாழ்வை இலகுவாகக் கொண்டு செல்ல வழிவகுப்பதே பொறியியல் கல்வியின் நோக்கமாகும். மனித உடலில் மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் ஐந்து பொறிகள் உண்டு என்பது அனைவர்க்கும் தெரிந்ததே. இப்பொறிகள் வாயிலாகவே தொடுதல், சொல்லல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் என்னும் ஐம்புலன்களும் செயற்படுகின்றன. இப்புலனுணர்ச்சிகளை மூளை பகுத்து வகைப்படுத்தி மனம் என்னும் நுண் கருவிக்குச் செலுத்த நாம் அதை உணர்ந்து அனுபவிக்கிறோம். அந்த அனுபவத்தில் சாதாரணமாக நாம் ஆழ்ந்து மூழ்கிவிடுவதால் அதனை ஏற்படுத்திய பொறிகள் பற்றியோ அவைகள் எங்ஙனம் இயங்கி இவ்வனுபவம் ஏற்பட்டது என்பது குறித்தோ அதை அடையும் முயற்சியில் பொறிகளுக்கு நேரும் பாதிப்புக்கள் குறித்தோ அலட்டிக் கொள்வதில்லை. பொறி ஒன்று செயற்படாமல் அல்லது திறன் குறைந்து போகும் போது தான் அதைப்பற்றிய சிரத்தை வருகிறது. அத்திறன் குறைவை நிவர்த்தி செய்ய நடவடிக்கையில் இறங்குகின்றோம். மனித உடம்பின் பொறிகளைச்சிரத்தையுடன் கவனித்து அவற்றின் இயக்கங்களை நன்கறிந்து பயன்படுத்தினால் தான் அவற்றினாலான முழுப்பயனை எய்தமுடியும். இதை எவ்வாறு செய்யலாம் என்பதை அறியும் அறிவே 'யோகம்' என்று அழைக்கப்படும். பொறிகளைச் சரியானபடி பயன்படுத்தாமல் வெறும் புலனுணர்ச்சியை நுகர்ந்து அனுபவிக்க முயல்வதனால் தான் நவீன கால மனிதனுக்கு "எய்ட்ஸ்" போன்ற கொடிய நோய்கள் ஏற்படுகின்றன. அதே போல பௌதீகப் பொறிகளைச்சரியானபடி கையாண்டு பயன்படுத்தாவிட்டால் அவை மனிதவாழ்வுக்குப் பெரும் ஊறு செய்பனவாக இருக்கும்.

தொடர்ந்து வேலை செய்யக்கூடிய பொறிகளே எந்திரங்கள் எனப்படும். அநேக எந்திரங்கள் சுழலும் பாகங்களையுடையன. பொறியியலின், ஒரு உபபிரிவே எந்திரப் பொறியியலாகும். குடிசார பொறியியல் மின்சாரப் பொறியியல் மின்னணுப்பொறியியல், இரசாயனப்பொறியியல், கப்பற்பொறியியல், விமானப்பொறியியல், வைத்தியப்பொறியியல், ரொக்கெட் பொறியியல், அணுப்பொறியியல், கம்பியூட்டர்பொறியியல் எனப்பல பிரிவுகளாகப் பொறியியல் பகுக்கப்பட்டிருந்தாலும் இவை அனைத்திலும் உபயோகிக்கப்படும் ஒன்றாக எந்திரப் பொறியியல் உள்ளது.

உலகமே எந்திர மயமாகி வருவது தவிர்க்க முடியாத ஒரு மாற்றமாக உள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சியும் மதிப்பும் அங்குள்ள எந்திர சாதனங்களின் அளவிலும் திறனிலுமே தங்கியுள்ளது எனும்படிக்கு எந்திரங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் உற்பத்தித்திறனும் அந்த நாட்டிலுள்ள எந்திரமயப்படுத்தப்பட்ட தொழில் நிறுவனங்களின் கைகளிலேயே தங்கியுள்ளன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கூறமுடியும். "எந்திரமனிதன்" என அழைக்கப்படும் ரோபோ கூட உருவாகி மனிதனோடு சவால்விடுமளவுக்கு அரிய சாதனைகள் செய்து வியப்பில் ஆழ்த்தும் காலமிது. எனவே எந்திரப்பொறியியலானது தற்போது தனியான ஒரு பெரும் அறிவியலாக வளர்ச்சி பெற்றுள்ளது என்பது கண்கூடு.

எந்த ஒரு தொழிலையும் சிக்கனமாகவும் திறமையாகவும் செய்யவேண்டுமாயின் அத்தொழிலை ஆற்றுவதற்கேற்ற நுட்பங்களை அறிந்திருத்தல் வேண்டும். அடுக்களையில் சமையல் வேலை செய்யும் போதும் அவ்வேலையின் நுட்பத்தையும் ஒழுங்குபாட்டையும் கடைபிடிக்காதவரால் திறமையாக உணவு சமைக்க முடியாது. வாழ்க்கையில் நாம் ஆற்றுகின்ற எண்ணற்ற தொழில்களுக்கும் தனித்தனி தொழில்நுட்பங்கள் உண்டு. சில தொழில்நுட்பங்களைப்புரிந்து கொண்டு சாதாரண அறிவு படைத்தவரும் தமது செயல்களின் திறனை மேம்படுத்தலாம். சில தொழில்நுட்பங்களைப் புரிந்து கொள்வதற்கு முறையான கல்வியும் பயிற்சியும் அவசியமாகும். மனிதனின் நுண்ணறிவின் வளர்ச்சியின் அளவுக்குத் தொழில்நுட்பமும் வளர்ந்து கொண்டே வரும். எந்திரப்பொறியியல் விஞ்ஞானமானது ஒரு சீர்ப்படுத்தப்பட்டது உயர்ந்த தொழில்நுட்பத்துறையாகும். அதை வாழ்வில் பிரயோகித்துப் பயனடையும் போது அது பிரயோக எந்திரப்பொறியியல் என அழைக்கப்படுகிறது.

பொறியியல் பொருட்கள் அவற்றின் குணங்கள் வலிமை வெப்பப்பதனமாக்கல் பொறியியல் பொருட்களின் செயலிழப்பு அரிப்பும் அரிப்பதைத்தடைசெய்தலும் நிலையுறுதி வழியுறுதி உபகரணங்கள் விற்களும் அவற்றின் பயன்களும் பொறிமுறை உராய்வு பொறிமுறை வலுச் செலுத்துதல் வேலைக்கள உபகரணங்களும் பிரயோகங்களும் மட்பாண்ட உலோகப் பாண்ட செய்முறைகள் உருக்கி யொட்டும் தொழில்நுட்பம் தொழிற்கூடப் பராமரிப்பும் ஆபத்துவராமல் முன்காத்ததும் பாயி இயந்திரங்கள் பொருட்களின் பொறிமுறை கையாளுகை மசகிடுதல் உலோகங்களை இணைக்கும் முறைகள் வெப்ப இயந்திரங்கள் காற்று பதனமாக்கலும் குளிர் ஊட்டுதலும் பொறிமுறை அதிர்வுகள் மாற்றிட்டு எரிபொருள் மூல வளங்கள் என்பன போன்ற பல்வேறு விடயங்களை பிரயோக எந்திரப்பொறியியல் எடுத்தாள்கிறது. சாதாரணமான வாழ்க்கையிலேயே தெரிந்தோ தெரியாமலோ நாம் பொறிகளைப் பயன்படுத்தி வருவதால் அவற்றைப்பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பொறிகளின் அதிக பட்ச பயன்பாட்டை அடையலாம். எந்திரப்பொறியியல் கற்பவர்களுக்கு இயல்பாகவே ஒரு மன ஒழுங்குப்பாடு ஏற்படும். உணர்ச்சியல் மயங்காது அறிவு பூர்வமான ஒரு விழிப்புணர்வு வளர்ச்சியடையும். விஞ்ஞானசிந்தனைப்பாங்கு மலர்ச்சியடையும். கற்பனைவாதக் கருத்துக்களும் மூடக்கொள்கைகளும் உள்ளத்தைவிட்டகன்று பகுத்தறிவு மேலோங்கும். திறமையான ஒரு முகாமையாளனாகவும் விஞ்ஞானியாகவும் சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாகவும் விளங்க முடியும். எந்திரப்பொறியியல் துறையில் நிபுணத்துவம் பெறுவதற்கு முறையான படிப்பும் பயிற்சியும் மட்டும் போதாது. ஆர்வமும் சிரத்தையும் நிறைந்த பொறுமையும் நிதான புத்தியும் கூட அவசியம். சங்கீதம், ஓவியம் நாட்டியம், கவிதை போன்ற நுண்கலைகள் வாழ்க்கையின் மனச்சுமைகளை மறக்கடிக்கவைக்கும்படிக்கு மனதைவசப்படுத்தித் திசைதிருப்பவல்லன. இவை உணர்ச்சியை அடிப்படையாக வைத்தே இச் செயலைக் செய்கின்றன. ஆனால் அவற்றின் தாக்கம் குறைந்தவுடன் மீண்டும் மனச்சுமையின் ஆதிக்கம் சார்ந்த எந்திரப் பொறியியல் கூட ஒரு நுண் கலை தான் எனினும் அது உணர்ச்சியை அடிப்படையாய்க் கொண்டது அல்ல. எனவே அதன் பிரயோகத்தால் வரும் மாற்றம் நிரந்தரமானதாக இருக்கும். உணர்விற்கு அடிமைப்பட்டு மனதின் சமநிலையை இழப்பதைவிட மனச் சமநிலை குலையாமலேயே அறிவியல் மூலம் நலம் பெறுவது ஒருவகையில் சிறந்தது எனவே கொள்ளவேண்டும். எந்திரப்பொறியியல் தொழில்நுட்பம் ஒரு சமூகத்தின் அல்லது இனத்தின் கலாச்சாரத்தோடு பின்னிப்பிணைந்து வளருமானால் அந்தச் சமூகமோ இனமோ உலகில் முன்னணியில் திகழ்ந்து சுடர்விட்டுப் பிரகாசிக்கும். வேறு துறைகளில் ஏற்படும் பின்னடைவைக் கூட தொழில்நுட்பக்கலாசாரம் நிவர்த்தி செய்து அந்தச்சமூகத்தின் அல்லது இனத்தின் பெருமையை உலகில் நிலைநாட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SECTIONAL HEADS



Mr. S. S. Pooranampillai (Head of Engineering)



Mr. T. Kailainathan (Head of English)



Mr. V. S. Keetha Pongalan (Head of Diploma)



Mr. Rajaratnam (Head of Certificate)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய அபிவிருத்தித் திட்டம் – நிறுவன அமைப்பு

## AN INSTITUTION FRAME WORK FOR REGIONAL PLANING

செ. பத்மநாதன்
திட்டப் பணிப்பாளர்
யாழ் செயலகம்.

அபிவிருத்தி என்பது என்ன என்பதில் பொருளியலாளர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கூறுவர். எனினும் இன்றைய நோக்கத்தை அடிப்படையாக வைத்து அபிவிருத்தி என்பது உற்பத்தி அதிகரிப்பு நியாயமான பங்கீடு மக்கள் தமது விழுமியங்களைப் பாதுகாப்பது என்ற அடிப்படையில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் மாற்றம் எனக் குறிப்பிட விரும்புகின்றேன். இங்கு மக்களது விழுமியங்கள்.

1. சமூக விழுமியங்கள்
2. அடிப்படை விழுமியங்கள் என இரு பிரிவுகளாகக் குறிப்பிடலாம்.

இவ் அபிவிருத்தியை அடைவதற்காக அபிவிருத்தியடைந்த நாடுகளும், அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளும் பலவகையான அணுகுமுறைகளைக் கையாண்டும் பரீட்சித்தும்வருகின்றன. அதே நேரத்தில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் தமது நாடுகளது துரித அபிவிருத்திக்காக – அபிவிருத்தி அடைந்த நாடுகளால் பின்பற்றப்பட்டு வரும் பொருளாதாரக் கொள்கைகளை திட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளை தாமும் அதே முறையில் பின்பற்றி பின்பற்ற திட்டமிட்டு வருகின்றனர். இதனால் அந் நாடுகளில்

1. பாரிய கைத்தொழில்
2. பாரிய நகரமயமாக்கல் என்பவற்றை எதிர்பார்த்தனர்.
   இது தற்பொழுது படிமுறை வளர்ச்சியற்ற

காரணத்தால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாமல் போனது மாத்திரம் அல்ல – வேறு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். எனவே அபிவிருத்தி அடைந்த நாடுகளது வளர்ச்சிக்கான காரணங்களை ஆழமாக ஆராயப்பட வேண்டியதாகும். அதில் சில அம்சங்கள்:

- ❐ அந்நாடுகள் பெற்று வந்த குடியேற்ற நாடுகளது வருமானம்
- ❐ அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் தொழில் நுட்ப முகாமைத்துவத் துறையில் தற்போதைய புதிய தொழிற்சாலைகள் போல் பாரிய போட்டியை அவர்களால் எதிர்நோக்கவில்லை.
- ❐ வாழ்க்கைத் தரம் குறைவாக அக்காலத்தில் இருந்ததால் மூலதன ஆக்கம் அதிகமாக இருந்தது.
- ❐ இவ் அபிவிருத்தியை அடைய இந் நாடுகள் நீண்ட காலத்தை எடுத்தன. இக்காலப் பகுதியில் பல வசதியீனங்களையும் அந் நாட்டு மக்கள் அனுபவித்தனர். அதாவது இவ்வளர்ச்சிக்கு அந்நாடுகள் கொடுத்த விலை மிக அதிகமாகும்.
- ❐ இவ் அபிவிருத்தி பெரும்பாலும் அரச தலையீடின்றி தாமாகவே ஏற்பட்டதொரு வளர்ச்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் முழுமையாக அவர்களது முறையை பின்பற்ற முடியாததாகும். அத்துடன் இந்நாடுகளது அரசாங்கமும் இவ் அபிவிருத்தி வேலைகளை செயல் படுத்த வேண்டியுள்ளது. எனவே இவ் அரசுகள் தமது அதிகாரத்தையும் உரிமையையும் தமது நாட்டில் உள்ள மூலவளங்களை அபிவிருத்திக்காக ஒன்று சேர்க்கவும் அதனை உற்பத்தி நோக்கத்திற்கு உபயோகிப்பதற்கும் வேண்டிய கட்டளைகளை செயல் படுத்த வேண்டியுள்ளது. அதில் மக்களும் அரசும் சேர்ந்து எதிர்பார்க்கும் அபிவிருத்தியைச் செய்ய வேண்டியுள்ளது.

இவ் இலக்கை அடைவதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மத்திமப் படுத்தப்பட்ட திட்டங்களை செயற்படுத்தி வந்தன. தமது மூலவளங்களை உபயோகித்து வந்தன. இது எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை. ஏனெனில்

1. அ. திட்ட உருவாக்குனர் (Policy makers)
   ஆ. திட்டமிடலாளர் (Planners)
   இ. செயல்படுத்துகை (Implencaters)
   என்பவர்களுக்கிடையே தொடர்புகள் பூரணமானதாக இல்லாமை.

2. எதிர்பார்க்கப்பட்ட திட்ட இலக்கை அடைவதற்குட்பட்ட கால காலத்துக்கிடையில் மாற்றமடையும்.

   அ. அரசியல் சமூக பொருளாதார நிலைமை
   ஆ. உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றம்
   இ. தொழில் நுட்ப ரீதியான புதிய கண்டுபிடிப்புகள் என்பன.

3. திட்டத்தை அமுல் படுத்தும் மக்களது விழுமியங்களும் பெறுமதிகளும் மாற்றமடைவதுடன் உற்பத்திக் காரணிகளையும் பாதிப்படையச் செய்யும்

இதனை ஈடுசெய்வதற்கு நிறுவனரீதியான மாற்றங்கள் தேவைப்பட்டன இந்நிறுவன சீர்திருத்தங்கள் மக்களையே மையமாகக் கொண்டு செய்யப் பட வேண்டியவையாகும்.

இது – ❐ மக்களை நோக்கியும்
❐ அவர்களிடமுள்ள வளங்களை அளவிடக் கூடியதாகவும்
❐ அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாகவும்
❐ நிதி ரீதியாக பொருளியல் ரீதியாக தொழில் நுட்ப ரீதியாக மக்களை நோக்கியும்
❐ சிறந்த முறையில் ஒன்று திரட்டப்பட்டதாக அபிவிருத்தியை மையப்படுத்தியும்
❐ நெகிழ்வுடையதாகவும் அமைக்கப்பட வேண்டிய தேவையேற்பட்டது.

தேசிய திட்டமிடலில் முக்கிய நோக்கம் அடிப்படை உற்பத்திக் காரணங்களை பல துறைகளுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் உச்ச பயனை அடைவதாகும். இது தேசிய புள்ளி விபரத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும். இது முழுப் பொருளாதாரத்துக்குமாக தயாரிக்கப்படுவதாகும். ஆனால் இதில் திட்டமிடலாளருக்கு பல பிர தேசங்களுக்கிடையான பொருளாதார சமூக அமைப்பு முறைகள் பற்றியோ பின்தங்கிய பிரதேசங்கள் அவற்றுக்கு செய்ய வேண்டிய விசேட செயற்திட்டங்கள் பற்றிய அறிவு எதிர்பார்க்கப்படுவதில்லை. தேவையும் இல்லை. இதனால் சிறப்பாக செயற்படுத்தக்கூடிய திட்டங்களை அவரால் வரைய முடியாது. இதுவே தேசிய திட்டங்கள் காரணமாக சில பிரதேசங்கள் குறைந்த வளர்ச்சியையும் அடைந்து செல்வதைக் காணலாம். எனவே புதிய அமைப்பு முறைகளும் திட்டம் தயாரித்தல் செயல் படுத்தல் முறைமையும் தேவையாயிற்று.

தேசிய திட்டமிடலில் இருபடி முறைகள் காணப்படுகின்றது.

1. தேசிய மட்டத்தில்
2. களமட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு மட்டத்திலான திட்ட செயல்பாடுகள் திட்டத்தின் எதிர்பார்த்த இலக்கை அடையமுடியாத நிலையை உருவாக்கியுள்ளது. அது மாத்திரமல்ல அத்திட்டம் எந்த இலக்கு மக்களை அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டதோ அவ்வாறு அவர்களை சேரத் தவறிவிடுகின்றன. இத்தகைய திட்டங்களின் காரணமாக பிரதேசங்களிலே பொருளாதார நிலை பற்றிய வேறுபாடுகள் ஒரே பிரதேசத்தினு் பொருளியல் வேறுபாடுகள் என்பன ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது. உதாரணமாக இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் ஏற்படுத்தப்பட்ட மத்திய பொருளாதார நடவடிக்கையால் தென்மேற்கு ஈரவலயமே தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. உலர் வலயம் தொடர்ந்து குறைவிருத்தியாக இருந்து வந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

எனவே, புதியதோர் திட்ட அணுகுமுறை தேவையேற்பட்டுள்ளது. அதுவே பிராந்திய திட்டமிடல் ஆகும். இதற்கு மூன்று முக்கியமான முன் நிபந்தனைகள் தேவைகளைக் குறிப்பிடலாம்.

அ. புதிய நிறுவன முறையொன்று நிறுவப்படுதல்.

ஆ. அபிவிருத்திக்கான காரணிகள் எல்லாம் அத்திட்டத்தில் சேர்க்கப் படல் வேண்டும்.

இ. திட்டம் கூடிய நெகிழ்வுத் தன்மை உடையதாக இருக்க வேண்டும் அதுபோலவே திட்ட ஆக்கம் திட்ட ஒன்றிணைத்தல் செயலாக்கம் என்பனவும் மூன்று மட்டங்களில் உள்ளதாக இருக்க வேண்டும்.

1. தேசிய மட்டம் – அடிப்படை தேசிய பொருளாதார கொள்கைகளுக்கு இணங்க கொள்கைத் திட்டமிடல்

2. இடை மட்டத்திட்டமிடல் இது இடையான பல்வேறு துறைகளையும் ஒன்று சேர்த்தல் தேசிய திட்டங்களது கொள்கைகளையும் அதனை அமுல் நடத்தும் அடிமட்ட அமுலாக்கலையும் தொடர்பு படுத்தல் ஒன்றிணைத்தல் திட்டங்களை சூழ்நிலைக்கேற்ப செயர்திட்டம் மாற்றியமைத்தல் ஆகிய கடமைகளைக்கொண்டிருக்கும்.

3. அடிமட்ட திட்டமிடல் – இது தேசிய திட்டங்களை அமுலாக்கும் உரு நில அலகு, தொழில் அலகு சேவை அலகின் மூலம் திட்டங்களை அமுலாக்கல் அதில் அமுல் நடத்துவதில் உள்ள குறைபாடுகளைத் தெரிவித்தல் திட்டத்தை மறுசீரமைத்து அதன்படி செயற்படுத்தல் என்பனவாகும். இவ் உற்பத்தி மையங்களினாலேயே தேசிய திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

அத்தோடு பிரதேச திட்டங்களை ஆக்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் அப்பிரதேசத்திலுள்ள பல காரணிகள் செயற்படுவதனால் ஒரு பிரதேசத்துக்கான காரணிகள் மற்றைய பிரதேசங்களில் வேண்டிய மாற்றங்கள் திருத்தங்களுடனேயே அமுல் செய்யப்படலாம். இம்மாற்றங்கள்

அ. திட்டமிடாளாளரும் – செயற்படுத்து மையத்தின் மக்களும் களத்திலேயே சந்தித்து கருத்து பரிமாறுதல் செய்வதாகும்.

ஆ. தேசிய கருத்திட்டங்களை உற்பத்தி மையங்களில் செயல் திட்டங்கள் ஆக்குவதாயும் செயற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

எனவே சுருக்கமாக நோக்கின் பிராந்திய திட்டமிடல் இரு முக்கிய பண்பினையும் அதன் மூலம் மூன்றாவது செயற்பாட்டு பரிணாமத்தையும் கொண்டதாக உள்ளது.

அவையாவன

* இது Macro திட்டமிடலுக்கும் Micro திட்டமிடலுக்கும் குத்தர்சில் ஓர் இணைப்பை உருவாக்குகின்றது.
* மனித மூலவள பொருட்கள் உபயோகத்தை கிடையாகக் குறிப்பிட்ட பிரதேசத்தினுள் திட்டமிடுகின்றது.
* ஒவ்வொரு செயல்பாடுகளும் இணையும் ஓர் இடமாக ஒரு குறுக்கு நடவடிக்கை இடமாக வருகின்றது.

இக்குறுக்கு நடவடிக்கை பல முக்கியமான அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. இங்கு குத்தானதும் கிடையானதுமான நடவடிக்கைகள் முழு அளவில் ஒன்று சேர்கின்றது.

2. குத்தாக உள்ள நடவடிக்கை ஒவ்வொரு உற்பத்தி மையமான பண்ணை முறையில் இருந்து தொழிற்சாலை உற்பத்தி முறையில் இருந்து திட்டமிட்டு தேசிய திட்டத்துக்கு இணங்க பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைத்திட்டங்களையும் கொண்டு செல்வதாகும். எப்பொழுதும் Macro திட்டமிடலுக்கு Micro திட்டமிடலும் ஒன்று படுவதில்லை. (Inconsistance) நோக்கமும் எதிர்பார்ப்பும் வேறுபட்டவை. இதனை இணைப்பதற்கு மத்தியில் ஓர் அமைப்பு தேவையானதாகும்.

உதாரணமாக ஒவ்வொரு பண்ணை அல்லது அலகு நிலத்திலும்

- உச்ச உற்பத்தி
- உச்ச வேலைவாய்ப்பு
- வருமானத்தை அதிகரித்தல்
- தொழில் நுட்ப பிரயோகம் என்பன Micro அளவு திட்டமிடலில் முக்கியமானதாக இருக்கும். இவை

அ. மனித உணர்வுகள்

ஆ. சமூக சூழ்நிலை போன்றவற்றின் பாதிப்பால் ஏற்படுபவை வாழ்க்கைச் சூழலால் ஏற்படுபவை இவைகவனிக்கப்படாமை முக்கியத்துவப் படாமையே Macro திட்டங்கள் எதிர்பார்த்த பயனை அடையாமைக்குக் காரணம் ஆகும். மத்தியில் அதனை இணைப்பது என்பது ஒவ்வொரு உற்பத்தியாளனையும் குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக இணைப்பதாக முடியும். இது எல்லா பொருளாதார துறைகளுக்குமான (Macro - Micro) கலந்துரையாடல் மையமாக மாறும்.

உள்ளூர் மக்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் நெருக்கமான தொடர்பும் ஒவ்வொரு செயலுக்கும் அம்மக்களிடம் இருந்து கிடைக்கும் பிரதிவிளைவுகளும் அந்த பிராந்தியத்தில் அபிவிருத்தி திட்டத்தின் வெற்றி தோல்விக்கு காரணமாக உள்ளது. உள்ளூர் எண்ணங்களும் கருத்துக்களும் அதிகளவுக்கு கருத்திட்டங்களுக்கு புதிய பரிமாணங்களை வழங்குவதோடு மட்டும் அல்ல அதிகமாக மூல திட்டங்களை மக்களது எண்ணத்துக்கு கருத்துக்கு ஏற்ப மாற்றம் செய்ய வேண்டியேற்படும்.

மக்களது எண்ணங்களோ அதிகமாக எதிர்வு கூறுதல் முடியாததாகும். அவர்களது எதிர் நடவடிக்கைகளை எதிர்வு கூற முடியாது. இதனை அவர்களுடனான நீண்ட தொடர்புகள் பரஸ்பர விளக்கங்கள் என்பவற்றினாலேயே திட்டக்குழு மனித பொருள் சூழலுக்கு ஏற்ப திட்டத்துக்கான முறைகளை தயார் பண்ணலாம்.

3. இடையிலான தொடர்பு :- இத்தொடர்பு பல நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

அ. இடையிலான பல்வேறு துறைகளுக்கிடையிலான தொடர்புகள் இது விவசாயம் கைத்தொழில் சேவைத்துறைகள் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பாகும். இத்தொடர்பு எந்த பிரதேசத்தில் கிடைக்கும் உபயோகிக்கப்படும் மூலவளத்தையும் அந்த பிரதேசத்தில் கிடைக்கும் பொருளாதார அபிவிருத்தி படிமுறைகளையும் உள்ளடக்கியதாகும்.

ஆ. குறிப்பிட்ட சூழ்நிலையில் உண்மையான கிராம அபிவிருத்தியை ஏற்படுத்தல்

இ. முழுமையான கருத்திட்டங்களை இறுக்கமாக செயல்வடிவுள்ள செயல் திட்டங்களாக்குதல் என்பனவாகும்.

இக் கிடையான இணைப்பை ஏற்படுத்தும் பொழுது பின்வருவன இணைக்கப்பட வேண்டும்.

1. பொருத்தமான பண்ணை உற்பத்தி முறைகள்
2. சேவை வசதிகள்
3. கைத்தொழில் அமைப்புக்கள்
4. நகரச் சந்தை
5. போக்குவரத்து வசதிகள்
6. பௌதீக திட்டம்

   அ. பிரதேச அளவிலான திட்டங்கள்

   ஆ. உள்ளூர் நிலைமைகளையிட்டு முதல்தர தரவுகள்

7. இயற்கை வளங்கள் மனித வளங்கள் கிடைப்பை நிச்சயப்படுத்தி ஒன்று திரட்டிய அபிவிருத்தி திட்டமும் குறிப்பிடப்படும் செயல்திட்டமும் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் இணைப்புகள் மூலம் அல்லது அதற்காக பிரதேசத்தில் ஏற்படும் அமைவு அதன் செயல்பாட்டில் பின்வரும் கடமைகளை செயல்பாடுகளை உடையதாக அமைய வேண்டும்.

அ. Macro -Micro திட்டங்களை இயைவுபடுத்துவதாக இருக்க வேண்டும்.
ஆ. ஒரு பல் செயல்பாடுகள் கொண்ட ஓர் தலைமைத்துவத்தை உடைய அமைப்பாக இடையிலான பல்துறைசார் திட்டங்களை தயாரிக்க கூடியதாக அமைய வேண்டும்.

இ. திட்டமிடலுக்கும் அதனைச் செயல்படுத்துவதற்குமிடையே செயல் செய்தி பரிமாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.
ஈ. செயல்படுத்துபவருக்கும் – செய்பவருக்கும் இடையே நேரடியானதும் தொடர்ச்சியானதுமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல்.

இச் செயல்பாடுகள் செய்வதற்காக இந்நிறுவனம் பின்வரும் வேலை முறைகளை (Step) எடுத்தல் வேண்டும். (ஒழுங்குபடுத்தல்)

1. அபிவிருத்தி திட்டங்களது நோக்கங்கள் காரணிகள் Constraints என்பனவற்றை அரசியல் பொருளாதார சமூக காரணங்களுக்கு ஏற்ப உருவாக்கல் திட்டப்படுத்தல் நிச்சயப்படுத்தல்.
2. அபிவிருத்தி திட்டத்தை பாதிக்கும் காரணிகளை அறிவதற்காக (Indentifive) தேவையான புள்ளி விபரங்களை சேகரித்தல்.
3. முன்னரே எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைவதற்கு கொள்கைகளையும் விபரதிட்டத்தையும் வரைதல்.
4. திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிர்வாக இயந்திரத்தை உள்ளடக்கியதான செயல்படுத்து நடவடிக்கைகளை திட்டமிடல்.
5. திட்ட செயல்படுத்துகையை ஒவ்வொரு படிமுறையிலும் தொடர்ச்சியாக கண்காணித்தல் அளவிடுதல் இது திட்டத்தை தேவையேற்படின் மாற்றியமைக்க உதவும்.
6. இந்த நிறுவன அமைப்பு கருத்திட்டங்களை செயல் திட்டங்களாக மாற்றியமைக்கும் பொழுது தேவையானதாகும். இது முழுமையான கருத்து பரிமாறல் என்ற செயல்பாட்டில் இயங்குவதாகும்.

எனவே அபிவிருத்தி பிராந்தியம்/பிரதேசம் என்பது சாதாரண பிரதேச நிலமைகளில் இருந்து வேறுபட்டது.

அது 1. எல்லையை அல்லது அபிவிருத்தியை நோக்காக கொண்டதாக இருக்கும். அதாவது குறுக்கு நடவடிக்கையை தன்னகத்தே கொண்டதாக இருக்கும்.

2. குறுக்கு நடவடிக்கையை சிறப்பாகச் செயல்படுத்துவதாகும் தனக்கு ஒரு எல்லையைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

3. தேசிய திட்டமிடலில் ஓர் செயல்படுத்து அலகாகவும் பல்வேறு உற்பத்தி பொருளியல் துறைகளும் ஒன்றுபட்டு இயங்குவதற்கு இயைவான பெரிய அளவினைக் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

4. உள்ளூர் மக்களுடன் அபிவிருத்திக்கான திட்டக்குழு தொடர்பு கொள்ளக் கூடியளவுக்கு சிறியதாக இருக்க வேண்டும்.

5. ஒரு விதமான புவியியல் சமூக பொருளாதார அமைப்பு உடையதாக இருக்க வேண்டும்.

6. செயல்பாடு உடையதாகவும் செயல்பட்டுக் கொண்டிருப்பதுமாக இருப்பதுடன் அதன் தன்மையானது அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதற்காக நெகிழ்ச்சியுடையதாகவும் பின்பற்றும் இயல்பும் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்த்துக்கள்

✻

## பா. திருலிங்கநாதன் வர்த்தக நிலையம்

**K. K. S. Road**

சி. எஸ். கே. கட்டிடம்.

யாழ்ப்பாணம்.

சகல விதமான Biscuits Toffee வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்



நல் வாழ்த்துக்கள்

## தீபா ஆடையகம்

நவீன ரக றெடிமேட் ஆடைகளுக்கும் சேட், பேபிசூட் சூட்டிங் மற்றும்

அனைத்துரக ஜவுளிகளுக்கும் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

171, நவீன சந்தை

யாழ்ப்பாணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல் வாழ்த்துக்கள்

# நியூ சுபமாலா மோட்டோர்ஸ்

மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகன உதிரிப்பாக
விற்பனையாளர்கள். மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

79, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்த்துக்கள்

## ANITA SCHOOL OF DRESS MAKING HAIRSTYLE & COOKERY

Cake Icing குக்கறி, சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம் ,
ஸ்ரொக்கிங், நெற், தையல், பூஅலங்காரம்
சகல ஓடர்களும் எடுக்கப்படும். அத்துடன் பயிற்சியும்
வழங்கப்படும். மனையியல் டிப்ளோமா
வகுப்புகளும் நடைபெறும்

Mrs. Pavalam Sivasupramaniam
Anita School
Poonarimar Road , Kokuvil - east. Jaffna



நல் வாழ்த்துக்கள்

## யாழ்தேவா கலையகம்

புகைப்பட நிலையம்
கே. கே. எஸ். வீதி,
றொட்டியாலடி
சுன்னாகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**MAZAINE COMMITEE**

SITTING - (L —>R) K.SIVAJINI, K.JEYARATNAM(Principal), K.NETHIRANANTHAN(Secretary), P.MAHENTHARAN(Editor), M.ANTONCHARLES(Vice-Pre), M.MAITHILY.

2ed Ro -( L—>R) V.SATHIJARAJH, K.MATHIVATHANASARMA(Ad.i.c) K.KEERTHIKANESHAN, K.THUSHANTHAN, L.SERAN, R.PIRABOSHANKAR(Auditor)

A. B. V.SENTHAN, K.RANCHITH(Cordinrtior), S.SUKIRTHAN, V.VINOTHINY, S.MAHILRAJAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்த்துக்கள்


# கவிலா பிக்஼ர் பலஸ்

# KAVILA PICTURE PALACE

297 A, Palaly Road,
Thirunelvely.

297, ஏ, பலாலி வீதி,
திருநெல்வேலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்த்துக்கள்

★

**இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்**

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம். பல் பொருள் வாணிபம் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

**E. S. Perampalam**
**50, Kasthariar Road**
**Jaffna**

50, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்



நல் வாழ்த்துக்கள்

★

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

**73, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் இறைக்கும் இயந்திரத்தை பேணுதலும் பழுது பார்த்தலும்

## WATER PUMP REPAIR AND MAINTENANCE

செல்வநாயகம் ஜெயக்குமார்

நீர் இறைக்கும் இயந்திரங்கள் கிணற்றில்,ஆற்றில் அல்லது குளத்தில் உள்ள நீரை தொட்டிகளுக்கு உயர்த்துவதற்கு அல்லது தோட்டம் வயல் என்பவற்றிக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கும் உபயோகிக்கப்படுகின்றது. இந்நீர் இறைக்கும் இயந்திரங்கள் இயங்குவதற்கு தேவையான சக்தியை பெற்றோல், மண்ணெண்ணை போன்ற எரிபொருள்களில் இருந்தே பெறுகின்றன. இவ்வகையான இயந்திரங்களில் உருளைக்குள் (CYLINDER) எரிபொருளும் காற்றும் கொண்ட கலவை தீப்பொறி செருகியினால் ( Sparking Plug ) எரிக்கப்பட்டு வெளிப்படும் சக்தியினால் ஆடுதண்டு ( Piston ) உந்தி தள்ளப்பட்டு அதன் மூலம் இணைக்கும் கோலுடன் (Connecting Road ) தொடர்பில் உள்ள சுழற்சித் தண்டு ( Crank Shaft ) சுழற்றப்பட்டு அதன் மூலம் நீர் இறைக்கும் பம்ப் (Water Pump) இயங்குகின்றது.

### எரிபொருள் தொகுதி(FUEL SYSTEM)

பெற்றோலை மட்டும் எரிபொருளாகக் கொண்டு இயங்கும் இயந்திரங்களில் பெற்றோல் இலகுவாக ஆவியாக கூடியதாகவும் விரைவில் தீப்பற்றக்கூடியதாகவும் இருப்பதனால் இலகுவாக தொடக்கப்பட்டு சீராக இயங்கக்கூடியதாக இருக்கின்றது.

மண்ணெண்ணை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் இயந்திரங்களில் எரிபொருள் தாங்கி இரண்டாக பிரிக்கப்பட்டு ஒருபகுதியில் பெற்றோலும் மறுபகுதியில் மண்ணெண்ணையும் நிரப்பப்பட்டிருக்கும். இங்கு மண்ணெண்ணை ஆவியாகும் தன்மை குறைவாக இருப்பதால் முதலில் இயந்திரம் பெற்றோலில் தொடக்கப்பட்டு சிறிது நேரம் இயங்கி குறிப்பிட்ட வெப்பம் அடைந்த பின்னர் பெற்றோல் நிறுத்தப்பட்டு மண்ணெண்ணையில் தொடர்ந்து இயங்குகின்றது. இவ் இயந்திரங்கள் இயங்குவதற்கு தேவையான சக்தியை பெறுவதற்கு எரிபொருளும் காற்றும் காபன் சேர்கருவிமூலம் (CARBURETTOR) தேவையான விகிதத்தில் கலக்கப்பட்டு கொடுக்கப்படுகின்றது. இங்கு காற்றானது காற்று துடைப்பத்தினால் (AIR CLENER ) சுத்திகரிக்கப்பட்ட பின்னரே காபன் சேர்கருவக்குள் வருகின்றது.

சில வகையான இயந்திரங்களில் காற்றை சுத்திகரிப்பதற்குவடி ( Filter ) பாவிக்கப்பட்டிருக்கும். (FOAM) இவ்வகையான வடிகள் வேலை செய்யும் 25 மணித்தியாலத்திற்கு ஒரு முறை சுத்தமாக்கப்படுதல் வேண்டும். அத்துடன் கண்டிப்பாக 3 மாதத்திற்கு ஒரு முறை புதிதாக மாற்றப்படுதல் வேண்டும். சில வகைபான இயந்திரங்களில் வடியும் ( Filter Element ) எண்ணையும் ( Oil ) பாவிக்கப்படும். இங்கு இயந்திரம் வேலை செய்யும். ஒவ்வொரு 25 மணித்தியாலத்திற்கு அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறை வடி சுத்தமாக்கப்படுவதுடன் ஒயிலும் ( Oil ) மாற்றப்படுதல் வேண்டும் அத்துடன் கண்டிப்பாகவேலைசெய்யும் 100 மணித்தியாலத்திற்கு ஒரு முறை அல்லது ஒவ்வொரு வருடமும் எலமென்ட் (Filter Element ) புதிதாக மாற்றம் செய்யப்படல் வேண்டும்.

இயந்திரம் குளிராக இருக்கும் போது அல்லது காலையில் தொடங்கும் போது காபன் சேர்கருவியில் ( Carburetter ) உள்ள அடைப்பின் மூலம் ( Choke ) செறிகலவை கொடுக்கப்பட்டு இயந்திரம்தொடக்கப்படும். இயந்திரம் சீராக ஓடத்தொடங்கிய பின்னர் சோக் விலக்கப்படுகின்றது. இங்கு காபன்சேர் கருவிக்குக் வரும் எரிபொருளானது வடித்து சுத்தமாக்கப்படுதல் வேண்டும். காபன் சேர்கருவியினுள் அழுக்கும் சேரும் போதும் அது உள்ளே எரிபொருள் வரும் பாதைகளையும் ஜெற்றில் ( Jet ) உள்ள துவாரங்களையும் அடைப்பதனால் உள்ளே வரும் எரிபொருள் தடைப்பட்ட இயந்திரம் விட்டு விட்டு வேலை செய்யும் அல்லது நின்று விடும். இக்குறைபாட்டை அவதானிக்கும் போது எண்ணை வரும் பாதைகள் துப்பரவாக்கப்படல் வேண்டும்.

### எரிபற்றல் தொகுதி (IGNITION SYSTEM)

இயந்திரங்களின் எரிபொருளும் காற்றும் கொண்ட கலவை தீப்பொறி செருகியினால் (Sparking Plug ) தீ மூட்டப்படுகின்றன. இச் செருகிகள் காற்றினால் குளிர் ஏற்றும் இயந்திரங்களுக்கு (Robin , Villiers,Enfield) நீளம் குறைந்த குளிரான தீப்பொறி செருகிகளும் ( Plug ) நீரினால் குளிரேற்றும் இயந்திரங்களுக்கு ( Wolistey ) நீளம் கூடிய சூடான தீப்பொறி செருகியும் பாவிக்கப்படுதல் வேண்டும். இத் தீப்பொறி செருகிகளில் உள்ள முனைகளுக்கு இடையே விடப்படும் இடைவெளி .025" அல்லது 0.6mm ஆகும். பொதுவாக இவ் இடைவெளி இரும்பு அரியும் வாள் தகட்டின் கனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இயந்திரம் வேலைசெய்யும் ஒவ்வொரு 50 மணித்தியாளத்திற்கு ஒரு முறை சீர் செய்யப்படல் வேண்டும்.

பொதுவாக இயந்திரம் சீராக இயங்குவதற்கு அது வேலை செய்யும்.200–300 மணித்தியாலத்திற்கு ஒருமுறை (Decorbonising) செய்யப்படுதல் வேண்டும் அதாவது இயந்திரத்தின் தலைப்பகுதி கழற்றப்பட்டு உள்ளேபடிந்துள்ள காபன்கள் துப்பரவாக்கப்படுவதுடன் வாயில் அரைத்தலும் (Value Grinding) செய்யப்படுதல் வேண்டும்.

**(உராய்வு நீக்கல் தொகுதி) LUBRICATION SYSTEM**

இயந்திரத்தின் பகுதிகள் உலோகங்களினால் செய்யப்பட்டுள்ளது. இவ் உலோகப் பகுதிகள் ஒன்றின் மேல் ஒன்று சுழலும் போது அல்லது ஒன்றுடன் ஒன்று அசையும் போது அவற்றிக்கிடையே உள்ள உராய்வினால் பகுதிகள் வெப்பம் அடைவதுடன் பகுதிகள் தேய்வு அடைந்தும் போகின்றன. இவற்றை தடுப்பதற்கு உராய்வு நீக்கி எண்ணை (Oil) உபயோகிக்கப்படுகின்றது. இவ் உராய்வு நீக்கல் எண்ணை இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் துருப்பிடிக்காமல் பாதுகாப்பதுடன் சத்தத்தையும் குறைகின்றது. அத்துடன் இயந்திரத்தின் வெப்பமும் குளிர்விக்கப்படுகின்றது. இவ் இயந்திரம் புதிதாக இருக்கும் போது அல்லது ஆடு தண்டு (Piston) புதிதாக மாற்றிய நேரங்களில் SAE - 30 என்ஜின் ஓயிலும் பின்னர் பகுதிகள் தேய்வடையும் போது SAE - 40 ஓயிலும் பாவிக்கப்படுதல் வேண்டும். கண்டிப்பாக இயந்திரம் வேலைசெய்யும் 25 மணித்தியாளத்திற்கு ஒரு முறை ஓயில் மாற்றப்படுதல் வேண்டும்.

**இயந்திரங்கள் பழுதடையும் போது பின்வரும் அறிகுறிகளை அவதானிக்கக் கூடியதாக இருத்தல்**

1. இயந்திரத்தை தொடக்க முடியாமல் இருத்தல்.
2. இயந்திரம் தொடங்குவதற்கு சிரமமாக இருத்தல்.
3. தொடங்கும் போது பின்பக்கமாக சுற்றல்.
4. இயந்திரத்தின் வலு குறைதல்.
5. இயந்திரம் அதிர்தல்.
6. ஒழுங்கற்ற இயக்கம்.
7. இயந்திரம் அதி வெப்பம் அடைதல்.
8. அதிக அளவு ஓயில் விரயம் ஆதல். (ஓயில் குடித்தல்)

**இயந்திரத்தில் அவதானிக்கப்படும் மேல் கூறிய அறிகுறிகள் கீழே தரப்பட்ட குறைபாடுகளினால் ஏற்படுகின்றன.**

**1) இயந்திரத்தின் அமுக்கம் குறைவடையும் போது கவனிக்கப்பட வேண்டியவை.**

1. தீப்பொறி செருகி (Sparking Plug) இளக்கம் அடைந்திருத்தல்.
2. உருளை தலை ஆணி இழகி இருத்தல் (Head Nut)
3. இணைப்பு இறுக்கி (Gas Ket) பழுதடைந்திருத்தல்.
4. வாயில் படுகை (Valve Seat) எரிந்திருத்தல்.
5. பிழையான தற்பெற் இடைவெளி (Tappet Clearence).
6. வளைந்த உருளை தலை.
7. முறுக்கம் அடைந்த அல்லது வளைந்த வாயில்.
8. தேய்வடைந்த உருளை (Cylinder) வழைந்தவாயில்.
9. உடைந்த இணைக்கும் கோள் (Connecting Rod).

**எரிபற்றல் தொகுதியில் அவதானிக்கப்படும் குறைபாடுகள்**

1. பழுதடைந்த போதிகை (Bearing).
2. விசையால் சில்லு (Fly Wheel Key)
3. பிழையான பிளாற்றினம் பொயின்ற் இடைவெளி. (Platnam Points)
4. எரிந்து போன அல்லது அழுக்கடைந்த பிளாற்றினம் பொயின்ற்.
5. மின் கடத்தியில் குறுக்கு சுற்றோட்டம்
6. பழுதடைந்தஒடுக்கி (Condenser)

**எரிபொருள் தொகுதியில் கவனிக்கப்படும் குறைபாடுகள்.**

1. அதிக நேரம் அடைப்பு மூடிய நிலையில் இருத்தல் (Over Choking)
2. காலையில் எரிபொருளின் செறிவு அதிகமாக இருத்தல். (Choking Time)
3. எரிபொருளுடன் நீர் கலந்து இருத்தல்.
4. காபறேற்றருடன் பொருத்தப்பட்டுள்ள இணைப்பு இறுக்கி பழுதடைந்திருத்தல். (Munting Gesket).
5. அழுக்கினால் அடைக்கப்பட்ட ஜெற் (Jet)
6. மிதவை ஊசி ஒழுங்கின்மை (Floating Needle).

மேல் குறிப்பிட்ட குறைபாடுகளை அவதானித்தும் அவை உடனடியாக சீர் செய்யப்படுதல் வேண்டும். இவை உரிமையாளர்களினால் வீட்டில் வைத்து சீர் செய்யக் கூடியவை. மேலதிகமான குறைபாடுகள் உடனடியாக இயந்திர வேலைத்தளத்தில் வைத்து சீர்செய்யப்படுதல் வேண்டும் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களே வழிக்கு வாருங்கள்

வரதட்சணை பற்றி
வரைந்து விட்டோர் ஏராளம் - ஆனால்
இன்று வரை
இவரின் தொகையோ
இமயமலை உச்சிவரை
ஏறி விட்டதப்பா
என்று தணியுமிந்த
ஏறிநிற்கும் சீதனம்
என்று ஏங்குகின்ற
மங்கையரே மங்கையரே
மன்றாடிக் கேட்கின்றோம்.
மனம் விட்டு சிந்தியுங்கள்
வரதட்சணை பற்றி - வீணே
வாலிபரை சாடாது
வஞ்சியரே சற்று - சரியான
வழிக்கு வந்தே சிந்தியுங்கள்
கணவன் என்று வரும் காளை தன்னிடத்தில்
கன்னியரே நீவிர்
காண்பதுதான் என்ன?
அழகா குணமா
ஆண்மையா வீரமா
இல்லையே இல்லையே
பதவி என்பதும்
பட்டம் என்பதும்
பார்ப்பதன் காரணத்தால்
பாழாவது பாவையரின் வாழ்வுதான்
கல்வி கற்கும் வயதினிலே
காதல் என்று சொல்லி
காளையிடம் மனதை பறிகொடுத்து
கல்யாணம் என்றவுடன்
சீர் கேட்டு எம்மை
சீர் கெடுத்தி விட்டாரேன்று
சீறிச் சினக்கின்றீர்
சிறிதே சிந்தியுங்கள்
காதலித்த பெண்ணவளை
கல்யாணம் என்றவுடன்
வரதட்சணை கேட்டு
வஞ்சித்து வரும் வாலிபர்க்கு
வஞ்சக மின்றியே
வரதட்சணை கொடுத்துகழுத்தை நீட்ட
காத்திருக்கும் கன்னியர்கள்
ஏராளம் ஏராளம்
எல்லோரும் ஒன்றாக
ஏமாற்றும் வாலிபரை
எடுத்து எறிந்துவிட்டால்
வழிக்கு வாராரோ வாலிபர்கள்
வஞ்சியரே தயங்குவதேன் ?
பெண்களே பெண்களே
பெற்றோர்கள் சொல்கிறார்கள்
பேதை நானும்
பேசாது பணிகின்றேன்
என்றகதை விட்டு
எழுந்து வாருங்கள்
எழுச்சி கொள்ளுங்கள்
அடுப்பங்கரையும்
அயல்வீட்டு சங்கதியும்
இனி எமக்கு வேண்டாம்.
மருமகள் மாமியார்
சண்டையும் வேண்டாம்
பெண்ணுக்கு பெண்ணே
பகையாய் இருந்த
பழங்கதை போகட்டும்.
பெண்ணுக்கு பெண்ணே
துணையாய் மாறிய
புதுக்கதை புனைந்திட
அனைவருமே ஒன்றாக
திரண்டிடுவோம் வாருங்கள்.

## ஆண்களே புரிந்த கொள்ளுங்கள்

ஓ............... ஆண்களே !
புரிந்து கொள்ளுங்கள் எங்களை
உணர்ந்து கொள்ளுங்கள் - எங்கள்
உள்ள உணர்வுகளை
சீமான்களே
சீர்கொடுத்து உம்மை - நாம்
வாங்க விரும்பவில்லை
சீராக உம்மோடு
வாழவே விரும்புகின்றோம்
ஆடவரே - உம்மை
அடக்கியாளும் அல்லிராணியாக - நாம்
வாழ விரும்பவில்லை
உம்மிடம் அடங்கி வாழும்
அருந்ததியாகவே - நாம்
வாழ விரும்புகின்றோம்.
காளைகளே
கல்யாணச் சந்தையிலே
சீதனமாம் விலையிலே
விலையாக வேண்டாம்
விரைந்து வாருங்கள்
வஞ்சியர் நாங்கள் இங்கே
கன்னியமாகவே கழுத்தை நீட்டுகிறோம்
மூன்று முடிச்சுகள் போடுவதற்கு
நம்பியரே
நன்றாக கேட்டிடுவீர்
வரதட்சணை தந்து - உம்மை
வாங்கிவிட்டாளோ
வஞ்சியர் நாங்கள் எல்லாம் - உம்மை
வணங்க மாட்டோம் - பதில்
வாட்டி எடுத்திடுவோம்.
வெருட்டுகிறோம் என்று
வீணாக நினைக்காதீர்
சத்தியமாய் சொல்லுகிறோம்
நிச்சயமாய் இது நடக்கும்.

அன்புடன்
பிரபாகரி ஆசைமுத்து
H. N. D. A. 4ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்

சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரத்துக் கதவுகளாய்ச்
சார்ந்திருப்பது ஆசிரியர் கூட்டம் – அது
அழுதான கவிகாட்டும் அந்திவண்ணப் பூந்தோட்டம்
அறிவுமனம் நிறைகலைக் கோட்டம்

ஏணியென மாணவரை ஏற்றிவிட்டுத் தாம் கீழே
இருப்பாரே இதுவன்றோ புதுமை – அந்த
மேனிநலம் பாராத மேதையரைப் பாடாமல்
மேதினியில் இருக்கிறதா கவிதை ?

அன்னவரின் நெஞ்சிலே ஆனந்தம் நின்றால்தான்
அறிவுநதி தேனாக ஓடும் – துன்பக்
கண்ணீரின் கரையோரம் கதைகேட்டு நின்றாலா
கவிதை மயில் அங்கெழுந்து ஆடும் ?

வறுமைக்குத் துணையான வாழ்வுக்குச் சுமையாகி
வாடுவதா ஆசிரியர் வேலை! – இங்கே
சிறுமைக்கு கவியாகித் தீயாலே கருகுவதா
சித்திரப் பூ மணமுந்துச் சோலை ?

தெய்வமணி மாளிகையில் தீபமெனத் தாமிருந்து
தெளிவான ஒளியறிவு தருவார் – ஆமாம்
நெய்யிழந்த பின்னாலும் நின்றெரிந்து மெய்கருகி
நெஞ்சோடிவார் யார் எண்ணெய் தருவார் ?

பெற்றமனம் போல்நமது பேதைமையைச் சுட்டுவிடப்
பெரிய கல்வி கற்றார்கள் மெல்ல – எல்லாம்
கற்றவர்கள் வறுமைகொடக் கற்கவில்லை ஆமந்தக்
கடவுளிடம் நாவிருவைச் சொல்ல ?

"தத்துவமே ஆசிரியர் தந்தது தான்" ஆரிது
சமுதாயம் போடுகின்ற கணக்கு – ஆனால்
புத்தகத்தைச் சுமக்கின்ற போக்கற்றோர் என மீண்டும்
புகல்கிறதே புரியவில்லை எனக்கு.

தம்குருதி நெய்யையிட்டுத் தம் நரம்பைத் திரியாக்கித்
தருகின்றார் அறிவொளியை நாளும் இங்கே
இம்மையிலே வழிகாட்டி இருளோட்டும் அவரில்லையேல்
எவ்விதம் மனித குலம் வாழும் ?

பட்டையிடப் பட்டையிடப் பனியொளியை சிந்துமெனப்
பலர்வைரம் தலைப்பற்றிச் சொன்னார் – வறுமை
சுட்டெரிக்க சுட்டெரிக்கத் தூவு ஒளி தருமிவர்க்குச்
சுவையாக யாருவமை சொன்னார் ?

கரைசேர்ந்த பின்னாலே கவலையலை மோதி தினம்
கண்கலங்கி நிற்கிறதே தோணி ? – அறிவுக்
குறைபோக்கும் ஆசிரியர் குறைதீர்க்கச் சமுதாயம்
கொடுக்கிறதா சரியான தீனி ?

ஆசிரியர் பணியொன்றே அறப்பணி என்றே தம்மை
அர்ப்பணித்துக் கொண்டவரைத் தொழுது – தென்றல்
விசிவரும் வேளைகளில் வித்தாரக் கவிதையெனும்
விதையிடுவோம் அறிவு நிலம் உழுது

அடுத்தவொரு புவிபடைத்தால் ஆண்டவனே! ஆழுகின்றோர்
ஆசிரியராக இருக்க வேண்டும் – அறிவு
கெடுத்தவரை மதிக்காத கோணல் மதிச் சமுதாயக்
கொள்கைக்கே உயிர்வரவோ மீண்டும் ?

ந. ராஜிதன்
N.C.E. (day)
1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் முகங்கள்

களைப்பாய் இருந்தது எனக்கு. கதிரையில் தலையை சாய்ந்து கால்களை நீட்டி அமர்ந்து கொண்டேன். எதிரே சுவரில் மாலைகளுக்கிடையே அம்மா பரிவாய்ப் புன்னகைத்தாள். இந்தப் புன்னகை இயல்பானதாய் அம்மாவோடு எப்போதும் நிரந்தரமாய் ஒட்டிக் கொண்டிருக்கும். அம்மாக்குவும் எப்போதுமே மெல்லிய மனசு இதமான மனசு, இளகிய மனசு, அதனால் தானோ என்னவோ அப்பாவை தன் போக்கிலேயே விட்டுவிட்டாள். குடும்ப பொறுப்புக்கள் முழுவதையும் தன் தலையிலே தாங்கித் தாங்கி ஒரு சுமை தாங்கியாய் தன் வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டாள்.

"அப்பாவுக்கு, வேலைக்குப் போறதும் மிச்ச நேரத்தில தன்ர அறைக்குள் இருந்து பெரிய படிப்பாளி மாதிரி படிச்சு கொண்டிருக்கவும் தான் தெரியும். இந்தக் குடும்பத்துக்காக என்ன செய்தவர். எல்லாப் பொறுப்பையும் அம்மான்ர தலையில் கட்டிப்போட்டு அவருக்கு சொகுசான வாழ்க்கை." சுகுமார் ஆத்திரத்தில் கத்தியது எனக்கு நினைவு வந்தது.

"உண்மைதான் அப்பா கொண்டு வந்து கொடுக்கும் சம்பளத்தில் அம்மா தன் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி எங்களை வளர்க்கப்பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமில்லை. ஆனால் அம்மா எப்போதுமே சலித்துக் கொண்டதில்லை. சுகுமார் போல் ஆத்திரப் பட்டதில்லை."

"அப்பாவுக்கு வேலைதான்டா முதல் மனைவி அதுக்குப் பிறகு தான் நாங்கள் எல்லாரும். அவர் வேணும் என்று அப்படிச் செய்யேல்ல. அவற்ர இயல்பு அப்பாடி அவருக்கு மென்மையான மனசடா. அவருக்கு உலகம் தெரியாது. இந்த உலகத்தில் உள்ள எல்லோரும் தன்னைப் போல யோக்கியன் என்று நினைச்சுக் கொண்டிருப்பவர். அவர் செய்யிற வேலையும் அவர் படிக்கிற புத்தகங்களும் தான் அவருக்கு உலகம். என்னைப் பொறுத்த வரையில் உங்கள் மூன்று பேரோட சேர்ந்து அவரும் எனக்கொரு குழந்தை தான்." இதைச் சொல்லும் போது அம்மாவின் கண்களில் நீர் திரையிடும். அம்மா ஒரு நாள் கூட அப்பாவை குறை சொன்னதில்லை. அவரின் குணத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டவள். எங்களுக்காக தன்னை உருக்கிக் கொண்டவள். அந்த மெழுகுவர்த்தி உருகிக் கொண்டிருப்பதை கையாலாகா தனத்தோடு வெறுமனவே பார்த்துக்கொண்டிருக்க மட்டும் எங்களால் முடிந்தது என்பதை எண்ணும் போது எனக்குள் ஒரு பெருமூச்சு எழுந்து அடங்கியது. சாகும் போது உயிர் போகுமுன் ஒரு முறை கண் கலங்கினாள். "அப்பாவை பார்த்துக்கொள்"என்று எனக்கு மட்டும் எனக் கேமட்டும் கேட்கும் குரலில் மெதுவாய் முனகினாள்.

"அம்மா நாளையோட அப்பாவின் முதல் மனைவியும் அவரவிட்டு விலகிப்போகப்போறாள். நாளைக்கு அப்பாவுக்கு வேலையில இருந்து ஓய்வு. அவர் ஓய்வு பெற்ற பிறகாவது உங்களைப்பற்றி நினைப்பாரா. உங்களோட இழப்பு எவ்வளவு பெரிய இழப்பு என்பதை புரிந்து கொள்வாரா."எனக்கு ஆதங்கத்தில் கண்கள் கசிந்தன. கண்ணீரோடு அம்மாவைப் பார்த்தேன். அம்மா முகத்தில் அதே பரிவான புன்னகை."

" நான் கூப்பிட்டது காதில் விழந்ததாப்பா " கன்னத்தில் அடித்தால் போல் குரல் கேட்டது. இந்த உலகப் பிரக்ஞையே இல்லாமல் அம்மாவோடு ஏதோ ஒரு புதிய உலகத்தில் இருப்பது போல இருந்த கனவு கலைக்கப்பட்ட மெல்லிய எரிச்சலுடன் குரல் வந்த திசையைத் திருப்பிப் பார்த்தான். வசந்தா நின்று கொண்டிருந்தாள். "என்னப்பா நான் எவ்வளவு நேரமோ கூப்பிட்டுக் கொண்டிருக்கிறன் ஏதோ யோசனையில் இருக்கிறீங்க." நான் அசையாமல் அப்படியே இருந்தேன். வசந்தாவே பேச்சை தொடர்ந்தாள். "மாமாவுக்கு நாளைக்கு ப்பியாவல் பாட்டி எல்லோ" நான் 'ம்' என்று தலை அசைத்தேன். "நாங்களும் போக வேணும் தானே." நான் மீண்டும் 'ம்' என்றேன். சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு அவளே பேச்சை தொடர்ந்தாள்."

"ஏன அப்பா மாமா பென்சன் எடுத்தாப் பிறகும் இங்கதான் இருக்கப்போறாரா ?" நான் கேள்விக் குறியோடு அவளைப் பார்த்தேன். என் பார்வை புரிந்தவளாய் அவள் சொன்னாள். "இவ்வளவு நாளும் வேலைக்குப் போறவர் எண்டபடியால் எங்களோட இருந்தார். இனி பென்சன் எடுக்கப்போறார். மற்றப் பிள்ளையளோடையும் கொஞ்ச நாள் போய் இருக்கட்டுமே." நான் அவள் முகத்தை ஊடுருவிப் பார்த்தேன். என்ன சொல்ல வருகிறாள் இவள். எதற்கு முன்னுரை எழுதுகிறாள். இனிமேல் அப்பா இங்கு இருக்க வேண்டாமென்கிறாளா ? இல்லை அப்பா எங்களுக்குப் பாரமாய் இருந்து விடுவாரென்று பயப்பிடுகிறாளா ? என் முகத்தைப் படித்தவளாய் அவளே பேச்சைக் தொடர்ந்தாள். "மாமாவுக்கு டயபிற்றிக் இருக்க அவருக்கு ஏற்ற மாதிரி சாப்பாடு செய்து கொடுக்க வேணும் ஏதாவது வருத்தம் கிருத்தம் வந்தாலும் லேசுல மாறாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கேற்ற வைத்திய வசதியும் இங்க இல்ல. பேசாம உங்கட தங்கச்சியோட கொழும்பில போய் இருந்தா நல்லது தானே ? பென்சன் காசை கொடுத்து அவவோட இருக்கலாம் தானே. அங்க இருந்தால் அவற்ற வருத்தத்துக்கும் நல்லது வெளிநாட்டில் இருக்கிற உங்கட தம்பியோடையும் ரெலிபோன்ல கதைக்கலாம். விரும்பினால் அவரே வெளிநாட்டுக்கும் கூப்பிடலாம் எல்லாத்துக்கும் வசதியாய் இருக்கும். என்னப்பா நான் சொன்னது கேட்டதே."

இவள் சுற்றி வளைத்து எங்கு வருகிறாள் என்பது எனக்குப் புரிந்தது. இவ்வளவு நாளும் அப்பா வேலை வேலையென்று ஓடிக் கொண்டிருந்தார். வீட்டில் தங்குவது குறைவு ஆனால். இனிமேல் அப்படி இல்லை. முழுநேரமும் வீட்டோடு இருக்கப் போகிறார். அதனால் அவர் பாரமாய் ஒரு சுமையாய் எங்களைத் தங்கி வாழ்பவராய் இருக்கப்போகிறார். தள்ளாமையும் வயோதிபமும் நோயும் சுமைகளாய் அவரை அழுத்தும் போது அவர் எங்களுக்கு ஒரு பெரும் சுமையாய் அமையப்போகிறார். இதை உணர்ந்து இதிலிருந்து கழன்று கொள்ள எனக்கும் அப்பாவுக்கும் இருக்கும் உறவுக்கும் இவள் வைக்கும் முதல் தீப்பொறி இது. இது நாளுக்கு நாள்வளர்ந்தது சுவாலித்து பெரும் தீயாய் எரியும் போது நான் இந்த தீயுக்குள் பொசுங்கி காணாமல் போகலாம். இந்த தீயின் உக்கிரத்தை அப்பா உணர்ந்து கொள்ளும் போது உறவுகளின் பொய்முகங்கள் கழன்று கொண்டு நிஜ முகங்களின் கோரங்கள் தெரியலாம்.

"மாமாவுக்கு நீங்கள் மட்டும் தான் பிள்ளையா அவையளும் பிள்ளையள் தானே. அவையளுக்கும் உங்கட அப்பாவ வச்சு பார்கிறது கடமைதானே." வசந்தா தனது கருத்தை நியாயப்படுத்துவதற்காய் ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருந்தாள். எனக்குள் திகுதிகு என்று கோபம் மூண்டது. ஆத்திரத்தில் அறிவை இழந்து விடுவேனோ. எந்த நேரத்தில் என்ன செய்வேனோ என்று எனக்கே பயமாய் இருந்தது. மிகப் பிரயத்தனப்பட்டு கோபத்தை அடக்கினேன். அவள் பேசிக் கொண்டே போனாள். எனது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் ஒவ்வொரு அம்புகளாய் எடுத்து ஏவிக் கொண்டு போனாள். அவையெல்லாம் எனது இதயத்தைத் துளைத்து சல்லடை போட்டன. நான் சோர்ந்து போனேன்.

இனந்தெரியாத பாரம் ஒன்று இதயத்தை அழுத்தியது. தலையை லேசாய் வலித்தது. அவளைத் திரும்பி தீர்க்கமாய்ப் பார்த்தேன். "அப்பாவுக்கு நாளைக்குப்பியாவல் பாட்டி அது முடியிறதுக்கிடையில் அவர் எங்க இருக்கிறது எண்டு பிரச்சினை வந்திட்டுதா" எனது பார்வையின் குரலில் தெறித்த கோபத்தில் அவள் மௌனமாய் தலைகுனிந்து இருந்தாள். "தயவு செய்து போய் படுக்கிறியா எனக்கு தலையிடிக்குது." அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள்.

"நான் முடிவா ஒண்டு சொல்லிட்டுப் போறன். இவளவு நாளும் நாங்கள் மாமாவ வச்சுபாத்திட்டம். இனி என்னால ஏலாது. உங்களுக்கென்ன நீங்கள் வேலைக்கு போயிடுவீங்கள். நான் தான் வீட்டு வேலையோட அவரையும் கவனிக்க வேணும். இனி என்னால ஏலாது. உங்கட அப்பா இனிமேலும் இஞ்ச இருக்கிறத நான் விரும்பேல்ல அவளவுதான்." அவள் சொல்லிவிட்டு அறைக்குள் புகுந்துகொண்டாள்.

நான் அதிர்ச்சியால் தாக்குண்டு அமர்ந்திருந்தேன். இப்படியொரு நேரடித் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. அவள் சுற்றி வளைத்து சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லிவிட்டு போய்விட்டாள். அப்பா எங்களுக்கு வேண்டாத உறவு. அவர் பாரம். எங்கள் வாழ்க்கைக்குச் சுமை. நினைக்க நினைக்க தலையை வலித்தது. எழுந்து சென்று ஒரு தலைவலி மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டேன். அறைக்குள் எட்டிப்பார்த்தேன் வசந்தா ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். என் தலையில் பெரிய குண்டாய் தூக்கிப் போட்டுவிட்டு இவளால் எப்படி இப்படி நிம்மதியாய் தூங்கமுடிகிறது. ஒரு மனிதனுக்கு அவள் மனைவிதான் உலகிலேயேமிகப் பொல்லாத பெண்ணாக காட்சியளிப்பாள் என்று எங்கோ படித்தது நினைவில் வந்தது. அது எவ்வளவு நிஜம் என்று நினைத்துக் கொண்டேன்.

அடுத்த அறையில் பலமாக இருமும் சத்தம் கேட்டது. அப்பாதான் இருமுகிறார். மெதுவாய் சென்று எட்டிப்பார்த்தேன். அப்பா கட்டிலில் அமர்ந்தபடி இருமிக் கொண்டிருந்தார். அவரைச் சூழ்ந்து அவர் காவலர்களாக அந்த புத்தக அலுமாரிகள். "என்னப்பா நித்திரை வரேல்லையா" அப்பா நிமிர்ந்து என்னைப் பார்த்தார். அவர் முகம் வெளிறிக் கிடந்தது. எனக்குள் அதிர்ச்சி தாக்கியது. நாங்கள் பேசியதை அவர்கேட்டிருப்பாரோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மெதுவாய் சென்று அவர் அருகே அமர்ந்து கொண்டேன். " ஏன் அப்பா நித்திரை வரேல்லையா." மீண்டும் கேட்டேன். அப்பா என்னை ஊன்றிப்பார்த்தார். சிறிது நேரம் சுவரை வெறித்தார். "நாளையோட எனக்கு பென்ஷன்" அப்பாவின் குரல் தழுதழுத்தது. எனக்குப் புரிந்தது இவருக்கு இது பெரிய தாக்கம். அது தான் முகம் வெளிறி நித்திரையின்றி தவிக்கிறார். அம்மா சொன்னது போல் அவரின் முதல் மனைவியின் இறப்பு நாள் நாளை. "இவ்வளவு நாளும் வேலைப் பிராக்கில் காலம் போயிட்டுது. இனியென்ன செய்யிறதெண்டு தெரியேல்ல." நான் மௌனமாக இருந்தேன். அவரே பேசட்டும் அவர் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளுக்கு வடிகால் தேடட்டும். "வேலையும் இந்த அறையில இருக்கிற இந்தப் புத்தகங்களும் தான் என்ர உலகமெண்டு இத்தனை வருஷமும் வாழ்ந்திட்டன்."அப்பாவிடம் பெருமூச்சு வெளிப்பட்டது. "இனி என்ன செய்யிறதெண்டு தெரியேல்லையடா " அப்பாவின் கண்களில் நீர் திரையிட்டது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மா இறந்த போது கூட இந்தளவுக்கு கலங்காத அப்பா இப்போது கலங்குகிறாரென்றால் அவர் வேலையில் வைத்திருந்த பற்றுதலை நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது.

நான் அப்பாவை ஊன்றிப்பார்த்தேன். நேற்றிருந்ததிலும் பார்க்க இன்று அதிக வயதாகிவிட்டவர் போல் தோன்றினார். அப்பாவின் முகத்தை இன்றுதான் இவ்வளவு கிட்டத்தில் பார்ப்பதாய்த் தோன்றியது. அப்பா தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தார். தன் வாழ்க்கையின் அர்த்தத்தையே இழந்து விட்டது போல் தன் நம்பிக்கை சுய கௌரவம் சமுதாய மதிப்பு அத்தனையும் ஒட்டு மொத்தமாய்ப் பறிபோனது போல் தான் நேசித்த ஒரு பொருளை தன் கண் முன்னேயே பிறர் பறித்துக் கொண்டு போவதை எதுவும் செய்யமுடியாமல் பார்த்துக் கொண்டிருக்கும் பரிதாபமான நிலையில் அப்பா இருப்பதாய் எனக்கு தோன்றியது. நான் லேசாய் அப்பாவின் தோளைத் தொட்டேன் அவர் கையை எடுத்து என் கைக்குள் வைத்து ஆதரவாய் அழுத்தினேன். அப்பா நீர் நிறைந்த கண்களோடு என்னைத் திரும்பிப் பார்த்தார். " அவர் ஒரு குழந்தையடா" என்று அம்மா சொன்னது நினைவில் வந்து போயிற்று.

"அப்பா இவ்வளவு நாளும் வேலை வேலையெண்டு ஓடித்திரிஞ்சது போதும்,இனி உங்களுக்கு ஓய்வு வேணும். வயசு போன காலத்தில கோயில் குளம் எண்டு சுத்தி திரிஞ்சு சந்தோஷமா மிச்சக் காலத்தையும் கழிக்கிறதவிட்டுட்டு என்னப்பா இதெல்லாம். நான் இருக்கிறன் அப்பா. உங்களுக்கு கடைசிவரையும் நான் உங்கள ஒரு குறையுமில்லாம பாப்பேன்." என்று சொல்லும் போது. "இனிமேலும் உங்கட அப்பா இங்க இருக்கிறத நான் விரும்பேல்ல." என்று வசந்தா சொன்னது நினைவில் வந்து என்னைச் சங்கடப்படுத்தியது. அப்பா லேசாய்ப் புன்னகைத்தார். என் சங்கடத்தைப் புரிந்து கொண்டிருப்பாரோ ?

காலை அப்பா பட்டுவேட்டி நஷனல்சால்வையோடு நெற்றியில் திருநீறோடு புதுப் பொலிவாய்த் திகழ்ந்தார். நானும் வசந்தாவும் தயாராக வாசலில் ஓட்டோ வந்து நின்றது. அப்பா அம்மாவின் படத்துக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். ஒரு சில நிமிடங்கள் தான். திரும்பி வந்து கொண்டிருந்த அப்பாவின் முகத்தில் புதிய பொலிவு. இரவிலிருந்த கலக்கமில்லை முகத்தில் வெளுப்பு இல்லை எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை நான் கொடுத்த உறுதிமொழிகளால் தானோ இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார். நான் திரும்பி வசந்தாவைப் பார்த்தேன். அவள் முகம் இறுகிக் கிடந்தது. அப்பா இந்த வீட்டைவிட்டு போகும் வேளையிலும் அவள் முகம் இப்படித்தான் இருக்கும் என்று தோன்றியது.

அப்பா வேலைபார்க்கும் அலுவலகத்தில் எங்களுக்காய் அனைவரும் காத்திருந்தனர். அப்பாவுக்கு மாலைபோட்டு வரவேற்றனர். அங்கு அலுவலகம் முழுவதுமே கூடியிருந்தது. அப்பா ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டார். அவருக்கருகில் நானும் வசந்தாவும் அமர்ந்து கொண்டோம்.

அப்பா எப்படி சாதாரண "கிளாக்" கிலிருந்து பதவியுயர்வு பெற்றாரென்றும் அவர் ஒழுங்கு நேரம் தவறாமை கண்ணியம் எல்லாத்தையும் விளக்கினார்கள். அப்பாவின் ஓய்வு இந்த அலுவலகத்திற்கு மிகப் பெரிய இழப்பு என்று கூறும் போது நான் திரும்பி அப்பாவைப் பார்த்தேன். அவர் கண்கலங்கியிருந்தது. அப்பாவுக்கு வெள்ளிக் கேடயம் ஒன்று பரிசளிக்கப்பட்டது. நீர் நிறைந்த விழிகளோடு பெற்றுக் கொண்டார். மீண்டும் மீண்டும் பலர் அப்பாவைப்பற்றி புகழ்பாடினார். அவர் பண்புகளை எடுத்து அலசினர். நான் அப்பாவை திரும்பிப் பார்த்தேன். அவர் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தார். கண்ணீரை மறைப்பதற்காய் இருக்கலாம்.

எங்களைவிட இந்த அலுவலகத்தினரே அப்பாவை அவர் குணங்களை அதிகம் அறிந்து வைத்துள்ளனர் என்று எனக்கு தோன்றியது. அப்பாவிடம் நான் அதிகமாய்ப் பேசியது நேற்றுத்தான் என்று நினைத்துக் கொண்டேன் அப்பா எங்களை ஒதுக்கினாரா இல்லை நாங்கள் அப்பாவிடமிருந்து ஒதுங்கினோமா என்று யோசிக்கையில் எது எப்படியிருந்தாலும் அப்பாவை அதிகம் புரிந்து கொண்ட ஒரே ஜீவன் அம்மாவே என்றே தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென்று கைதட்டும் ஒலி கேட்டு சுய நினைவுக்கு வந்தேன். பேசிக்கொண்டிருந்தவர் அப்பாவைப்பற்றி ஏதோ சொல்லியிருக்க வேண்டும். நான் திரும்பி அப்பாவைப் பார்த்தேன். அவர் இன்னமும் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தார். எல்லாப் பேச்சுக்களும் முடிந்து அப்பாவைப் பேச அழைத்தார்கள். கைதட்டல் ஒலி அலுவலகத்தை அதிரச் செய்தது நான் திரும்பி அப்பாவைப் பார்த்தேன். அப்பாவின் தலை கவிழ்ந்தே இருந்தது. தன்னை நிதானப்படுத்துகிறாரோ ? நிமிடங்கள் கழிய நான் அப்பாவின் தோளை லேசாய்த் தொட்டேன். அப்பாவின் தலை சரிந்து என்கைமேல் விழுந்தது. "அப்பா" நான் அதிர்ச்சியால் அலறினேன். அலுவலகமே ஸ்தம்பித்தது. ஆளாளுக்கு ஏதோ குசுகுசுத்தார்கள். நான் அதிர்ச்சிமாறாத விழிகளோடு அப்பாவைப் பார்த்தேன். அவர் உடல் சில்லிட்டிருந்தது. நிமிர்ந்து வசந்தாவைப் பார்த்தேன். அவள் முகத்தில் தெரிவது அதிர்ச்சியா ஆச்சரியமா சந்தோஷமா நின்மதியா ஆரவாரமெல்லாம் அடங்கி அலுவலகம் அமைதியில் மூழ்கியது. அப்பாவின் இறுதி அஞ்சலிக்குத் தயாரானது. எல்லோர் முகங்களிலிருந்து இன்னமும் அதிர்ச்சி அகலவில்லை.

மாலைகளுக்கிடையே புன்னகையுடன் இருக்கும் அப்பாவைப் பார்த்தேன். அவர் முகத்தில் ஏதோவொரு இனந்தெரியாத அமைதி குடிகொண்டிருந்தது. எதனால் இந்த அமைதி தான் நேசித்தது தன் கைநழுவிப்போகு முன்பே தான் முந்திக் கொண்டதாலா இல்லை யாருக்கும் பாரமாய் சுமையாய் இருக்காமல் சென்றதாலா இல்லை இத்தனை வருட வாழ்க்கையில் இந்த உறவுகளின் பொய் முகங்களை புரிந்து கொள்ளாமல் போனதாலா. எனக்கு நின்மதியாய் இருந்தது. ஏதோ வொரு பாரம் குறைந்தது போல் இருந்தது. ஏனென்று தெரியவில்லை. ஒரு வேளை எங்கள் சுயரூபங்களை அப்பா தரிசிக்காமல் போனதற்காய் இருக்கலாம். லேசாய் விசும்பும் ஒலிகேட்டுத் திரும்பிப் பார்த்தேன். வசந்தா கைக்குட்டையில் கண்துடைத்து அழுது கொண்டிருந்தாள் எனக்கு சிரிப்பு வந்தது. வாய்விட்டுபெரிதாய் சிரிக்க வேண்டும் போலிருந்தது. ✡

(யாவும் கற்பனை )

கி. துஷ்யந்தன்
N.C.A.T, 1ம் வருடம்

## உறுதியாய் இருந்திடு உண்மையை நாடிடு

ஐம்புலனை உனது ஆணைக்குள் கொண்டுவா
அறிவினை அணைத்திடத் துடித்து நீ எழுந்திடு
துணிவைப் பெருக்கிடு துயரத்தை ஓட்டிடு
பணிவை அணிந்திடு பண்புடன் வாழ்ந்திடு
தட்டெழுத்து பயின்றிடு கலைகள் நுகர்ந்திடு
கடமையை செய்திடு வன்மையை பெருக்கிடு
மென்மையைப் பூண்டுமே அழகுடன் மிளிர்ந்திடு
தன்மையில் உயர்த்திடு தயவுடன் வாழ்ந்திடு
அன்பினை ஆவலாய் என்றுமே வளர்த்திடு
ஆசையை ஆதரி பேராசையை விரட்டிடு
மொழிதனை ஆர்வமாய் நிதமுமே படித்திடு
முழுமைகொள் கருத்தினை கொண்டுநீ நினைத்திடு
உணர்வுடன் கூடியே உயர்த்துமே பறந்திடு
உறுதியாய் இருந்திடு உண்மையை நாடிடு
உணர்வினில் கிளர்ந்தெழும் ஒளிதனை மடக்கியே
உயிர்க்கவி புனையவே உழைத்திடு கவிஞனே!
நல்லதை அளித்திடு கெட்டதை அழித்திடு
செயல்தனை பெருக்கிடு சோர்விலா திருந்திடு
அறிவினை பருகிடு ஆழமாய்க் கற்றிடு
ஆயிர மாயிரம் கல்விமான்களாய் திகழ்ந்திடு

சிவகாமினி சிவநாதன்
ENGLISH STENOGRAPHY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணுக்குள்ளே அவள்வடிவம்

அன்னை வயிற்றுள் கருவாக
அடங்கிக் கிடந்த நாள் முதலாய்
என்னைத் தொடரும் பெருங்காதல்
இதயம் தணியாப் பெருமேக்கம்

அன்னக் குறையா மண்ணின்மேல்
ஐயா கையைப் பிடித்தெழுத
பரிசுக் கற்கண் டுக்காகப்
பாவை அவளை முதற் பார்த்தேன்

என்னை அவளும் எதிர் நோக்க
நானும் அவளை விழிசேர்க்க
சின்ன வயதில் நட்பாகச்
சேர்ந்தேன் அது ஒரு பழைய கதை.

கண்ணுக்குள்ளே அவள் வடிவம்
கருத்துக்குள்ளே அவள் வதனம்
எண்ணம் எல்லாம் அவளானால்
எவர்தான் பிரிப்பார் எம் நட்பை.

முல்லைக் கொடிக்குத் தேர்ந்தான்
முன்னோர் பாரி அவனே என்
கல்விக் கொழுகொம்பை நட்ட
ஞானத் தரகர் ஆசிரியர்.

அறிவுக் கோயில் தனையடைய
அன்புக் கல்வி தணையடைய
நெறியும் உணர்த்தி அவர் நின்றார்
நெறியின் படியே தான் சென்றேன்.

தந்தை தாயார் தடையில்லை
தடுக்கும் துணிவும் எவர்க்குமிலை
கருவம் இல்லை கனிவுண்டு
கன்னம் இல்லைத் தெளிவுண்டு

ஓ. எல் வகுப்பைத் தாண்டி விட்டேன்
ஏ. எல் தன்னில் சேர்ந்து கொண்டேன்
இரசாயனம் பௌதீகம் இவற்றோடும்
கசப்பாய் இருந்தது கணிதம் இரண்டும்

தொடர முடியா மற்தனியே
துயரில் உழந்தேன் சில மாதம்
படரக் கொம் பில்லாக் கொடிபோல்
மண்ணில் மீண்டும் தழைத்திட்டேன்

காணும் கணக்குப் பல கற்றேன்
கறுப்பும் சிவப்பும் பார்க்கவில்லை
வீணில் பொழுதைப் போக்காமல்
விழித்துப் படித்தேன் இரவெல்லாம்

ஐயா உடம்பு கெடுமென்றார்
அம்மா மூளை கெடுமென்றாள்
பொய்யோ மெய்யோ தானறியேன்
போக்கைச் சிறிதும் மாற்றவில்லை

கண்ணுக்குள்ளே அவள் வடிவம்
கருத்துக்குள்ளே அவள் வதனம்
எண்ணம் எல்லாம் அவளானால்
எவர்தான் பிரிப்பார் எம் நட்பை

கம்பஸ் என்று கனவு கண்டேன்
கறுப்புக் கொடியோ காட்டிவிட்டான்
கர்வம் கொண்டேன் மடைத்தனமாய்
காற்றாய் மறந்தேன் இனியவளை

முரளி என்ற நண்பனவன்
முத்தம் கொடுக்க உதவிட்டான்
அவனின் அன்புத் தாயாரும்
ஆர்வம் கொடுக்கப் படித்திட்டேன்

இரண்டாம் தரமென் றிருத்தறினால்
அதையும் தடுக்க முடியவில்லை
ஹாட்லிக் கல்லூரியில் நாம் அறுவர்
கனிவுடன் பெற்றோம் பொறியியலை

ஆரம்பக் காதல் எல்லாமே
அங்கு சென்றால் நிலைப்பதில்லை
ஆண்குலம் இப்படி என்றிட்டாள்
அதற்கு நான் னொரு விதிவிளக்கு

கண்ணுக்குள்ளே அவள் வடிவம்
கருத்துக்குள்ளே அவள் வதனம்
எண்ணம் எல்லாம் அவளானால்
எவர் தான் பிரிப்பார் எம் நட்பை

பல்கலைக்கழகம் கண்டிதனில்
அவளின் வடிவம் பல கண்டேன்
நாடகம் நாட்டியக் கலைகள் பல
சேர்த்தே சுவைத்தேன் பாவைதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுத் தழுவ எழும் எண்ணம்
துறைபோய்க் காணும் பேராவல்
பட்டுக் கலையின் மடிமீது
படித்துத் துயிலும் ஓரேக்கம்

தொட்ட நூலில் அவள் பரிசம்
சுவைத்த கலையின் அவளமுதம்
பதினொன்றோடு இரண்டு வயது வரை
மெல்லியடையாள் பின் தொடர்ந்திட்டேன்

தந்தை சொல்லை அடியொற்றித்
தாயும் கூற அதன்படியே
சிந்தை இன்றித் தொழிலோடு
சேர்ந்தேன் நெஞ்சில் ஏக்கமுடன்

பணத்தின் ஆசை மிதமிஞ்சி
அந்நிய நாடு சென்றிருந்தேன்
பகலும் இரவும் பாராது
பம்பரமாகச் சுழன்றிட்டேன்

ஜப்பான் காரக் கொம்பனியில்
நினைவு அலைகள் நிழலாட
அவளைத் தொட்ட கையாலே
மீட்டேன் வீணை ராகத்தில்

ஓய்வே அற்ற வேலையினால்
ஒன்பதும் பத்தும் பழகிவிட்டேன்
கபடமற்ற காதலியை
மறந்தே விட்டேன் நவ வருடம்

ஒளியைத் தொடர்ந்து செல்கையிலே
ஒருவர் வழியைத் தடை செய்தால்
இருளில் மயக்கம் தனைச் சூழ
திகைக்கும் மனிதன் நிலையில் நான்

அழுதேன் தொழுதேன் அலமந்தேன்
ஐயோ என்றேன் துடித்திட்டேன்
புழுவாய் நெளிந்தேன் ஒரு ஞானம்
பூவைக் காதற் பிரிவாலே

நானே அவளை மறந்திட்டேன்
அவளோ என்னை வெறுக்கவில்லை
ஆண்டவன் தந்த ஆசியினால்
கண்டேன் அவளை ஆசானாய்

கண்ணுக்குள்ளே அவள் வடிவம்
கருத்துக்குள்ளே அவள் வதனம்
எண்ணம் எல்லாம் அவளானால்
எவர் தான் பிரிப்பார் எம் நட்பை

கொக்குவில்தந்த தொழில் நுட்ப
கல்லூரி இற்பல கற்கை நெறி
குடிசார் எந்திர வியற்பகுதியினில்
மதிமுகம் அவளை மீண்டும் கண்டேன்

காதல் இன்றேல் சாதல் என
காளையன் கன்னியைக் காதலிப்பான்
பார்த்துக் சுவைத்துக் களிப்படைய
எனக்கோ மூன்று காதலிகள்

அமைப்புக்கள் பற்றிய வடிவமைப்பு,
பெருந்தெரு, நீர்ப்பாசனமென்று
சிறந்த மூன்று பெண் மீது
அடங்காக் காதல் கொண்டுவிட்டேன்.

ஆயிரம் ஏடுகள் புரட்டி விட்டேன் ஆனால்
அவளின் நெடுங் கதையின்
பாயிரம் இன்னும் முடியவில்லை
படித்து முடிக்கும் நாளேதுவோ

கண்ணுக்குள்ளே அவள் வடிவம்
கருத்துக்குள்ளே அவள் வதனம்
எண்ணம் எல்லாம் அவளானால்
எவர் தான் பிரிப்பார் எம் நட்பை

இழந்து பெற்ற செல்வமென
எனக்கு அவளின் திருநோக்கம்
விளைந்ததிதனை எவ ருந்தான்
வேண்டாம் என்றால் விடுவேனோ

என்னை அவளும் விரும்புகிறாள்
நானும் அவளைப் பருகுகின்றேன்
இன்னும் சுவைத்து முடியவில்லை
எப்போ முடியும்? நானறியேன்

ஒவ்வோர் நாளும் புது நூலாய்
உருவம் காட்டி நூலகத்துள்
துள்ளித் திரியும் அவளெழிலைச்
சொல்லால் சேர்க்க முடிந்திடுமோ

பாலின் கடலில் மீனைப்போல்
பாவை கல்விச் சுவை தந்து
நாலு வேறு திக்கினிலே
நானும் பொழுதை விடுவேனோ

கல்வி என்னும் ஒரு பெண்மேற்
காதல் கொண்டேன் அவள் பின்னே
அல்லும் பகலும் அலைகின்றேன்
ஆனால் இன்னும் நிறைவில்லை.✡

**ச. ஆ. ஞானேந்திரம்** (B.Sc Eng)
(A.M.I.E.(S.E)
(பகுதி நேர விரிவுரையாளர் (Tech)
குடிசார் எந்திரவியற் பகுதி)
(இலங்கைத் திறந்த பல்கலைக்கழக
யாழ் . பிராந்திய இயக்குனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்பமும் கொங்கிறிற்றும்.

கொங்கிறிற் ஆனது செயற்கை முறையில் உள்ள சீமெந்தினாலும் மணல் கல்லு (சல்லி ) நீா் என்பனவற்றின் ஒரு விகிதாசாரத்தில் சேர்ந்த கலவையாகும். இது கட்டடத்துறையில் முக்கியத்துவம் வாய்ந்தது. கொங்கிறிற்றானது, வேலை செய்யும் திறன், நீடித்துழைக்கும் தன்மை, நீர்கசியாத்தன்மை போன்ற மிகச்சிறந்த தன்மைகளைக் கொண்டுள்ளது. கொங்கிறிற் தயாரிப்பில் சிமெந்து முக்கிய பங்கை வகிக்கிறது. எனவே நாம் சீமெந்தைப்பற்றி ஆராய்வில் சிமெந்தை தயாரிக்கும் நோக்கமும் கிடைக்கும் இடம் அதன் தயாரிப்பில் ஏற்படும் செலவுகள் என்பனவற்றை அவதானிக்க வேண்டும். நோக்கம். கட்டடங்களை அமைப்பதற்கு. அதாவது வீடுகள், தொழிற்சாலைகள், மாளிகைகள், கடைகள், வைத்திய நிலையங்கள், ஆலயங்கள், அலுவலகங்கள், நீர்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள், சாலை (றோட்) அமைப்பு போன்ற இன்னும் பல நமக்குத் தேவையான தேவையை பூர்த்தி செய்கின்ற அமைப்புக்களை நிர்மானிப்பதற்கு சீமெந்து தேவைப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை கூடுதலாக சீமெந்து கிடைக்குமிடம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மற்றும் புத்தளம் போன்றவைகளாகும்.

அவற்றை தயாரிப்பில் ஏற்படும் செலவுகளும் ஆபத்துகளும் தயாரிப்புக்கு தேவையான இயந்திரங்கள் (தொழிற்சாலைக்கு தேவையானவை) வாகனங்கள் மூலம் பொருட்கள் என்பன வெளிநாடுகளில் இருந்தே பெறவேண்டியுள்ளது. இதனால் ஏற்படும் செலவுக்காக எமது பணத்தை வெளிநாடுகளுக்கே நிறைய அளவில் கொடுக்கின்றோம் என்பது நாம் அறிந்ததே இதேபோல் மின்சாரம் எண்ணெய் வகைகளும் எமது செலவில் அடங்கும். இதனால் ஏற்படும் ஆபத்து என்பது சீமெந்து தயாரிப்புக்கு தேவையான சுண்ணாம்புக்கல்லை வெட்டி, நம் நாட்டை வெட்டி எடுத்து கடலில் புதைப்பது போன்று அதாவது காங்கேசன் துறை சீமெந்து தயாரிப்பில் வெட்டப்பட்ட இடங்களில் கடல்நீர் வந்தடைந்தால், வரும் ஆபத்து காணப்படுவதை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

சீமெந்து தயாரிப்பில் சீமெந்தின் கூட்டுப் பொறிகளின் விகிதம். சுண்ணாம்பு 62% சிலிக்கா 23% அலுமினியம் 12 % இரும்பு ஒட்சைட் 1% மற்றும் உப்பு 2 % சேர்த்து தயாரிக்கப்படுகிறது. அதில் காற்றடைப்பு சீமெந்து என பலவகையில் சீமெந்து தயாரிக்கப்படுகிறது. சீமெந்து தயாரிப்பில் சிலிக்காவை அரைக்கும் போது 2 – 6% காற்றேற்றம் செய்வதால் சிமெந்திலுள்ள இடைவெளிகள் இக்காற்றில் செல்வதற்கு அதன் கனஅளவு அதிகரிக்கின்றது. இவை வேலை செய்வதற்கு இலகுவாக இருக்கும் ஆனால் நிறையும் சக்தியும் குறைவாக இருக்கும் இச் சீமெந்து அரைக்கும் போது நீர் தடைப் பொருள் பாவித்து தயாரிக்கப்படுகிறது. இதனால் நீர் தடை காரையிடல் நீர் தடைக் கொங்கிறிற் அமைப்புக்களுக்கு பாவிக்கப்படுகிறது. எனவே இதை நீர் தடை சீமெந்து எனவும். சாதாரன கொங்கிறிற்களில் சுருங்கும் தன்மையை மட்டுப்படுத்துவதற்கு இச் சீமெந்து பாவிக்கப்படுகின்றது. இச் சீமெந்து முன்வார்ப்பு முன்புனல் வலுவூட்டிய கொங்கிறீற்கள் அமைப்பதற்கு பாவிக்கப்படுகின்றது. இவை விரிவடையும் சீமெந்து எனவும். சுண்ணம்பு 64% சிலிக் கேற்று 24% இரும்பு ஒட்சைட்டு 4% மற்றும். சோடா பொட்டாஸ் அடகலன் சேர்ந்து தயாரிக்கப்படுகிறது. இதன் இறுதி சக்தி சாதாரண பொருட்கள் சீமெந்துக்கு சமமாக இருக்கும் இது 75% தொடக்கம் 80% சக்தியை முறையே 3 நாட்களிலும் 28 நாட்களிலும் அடைகிறது. இச்சீமெந்து முக்கியமாக கழிவுநீர் வடிகால்களில் உட்புறங்களிலும் பாலங்களின் தூண்கள் போன்றவற்றில் காரை இடங்களுக்கும் பாவிக்கப்படுகின்றது. இதனால் சல்பேற்றின் தாக்கங்களில் இருந்து அமைப்புக்களை காப்பாற்ற முடியும்.

சீமெந்து தயாரிப்பில் மேலே குறிப்பிட்ட விகிதங்களைவிட சுண்ணாம்பு அதிகமாகவோ குறைவாகவோ இருப்பின் அது தரத்தில் குறைந்த சீமெந்தை உண்டு பண்ணும். அதே போல் சீமெந்தின் நிறத்தை கொடுக்கும் இரும்பு ஒட்சைட்டு அதிகமாக இருப்பின் அது சிலிங்கா துண்டுகளை அரைக்கும் போதும் சிறிது கடினத்தை உண்டு பண்ணும் சீமெந்திலுள்ள மகனீசியம் போன்ற பொருட்களில் கூடுதலான அளவு தரமற்ற சீமெந்தை உண்டு பண்ண ஏதுவாக இருக்கும்.

சீமெந்து எவ்வளவு மென்மையாக இருக்கிறதோ அவ்வளவிற்கு அதன் பலம் அதிகரிக்கிறது சீமெந்தின் மென்மைத்தன்மையை 100கிராம் சீமெந்தை 170ம் எண் பிரித்தானிய நியம அரிதட்டினூடாக சுமார் 18 நிமிடம் அரிப்பதன் மூலம் காணலாம் 15 நிமிடம் இதனை அரித்த பின்னர் அரிதட்டில் தங்கியிருக்கும் சீமெந்தின் நிறை 1%ற்கு கூட மேலும் செல்லக் கூடாது இப்படியாக சீமெந்தின் மென்மையை அறியலாம். கொங்கிறிற்றுக்கு பாவிக்கப்படும் நொருங்கிய கற்களின் தன்மைகள் கடினமானதாயும் உறுதியானதாயும் நீடிய காலம் பாவிக்கக்கூடியதாகவும் வேலையின் தேவைக் கேற்ப பாரம் உடையதாய் இருத்தல் வேண்டும். நன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படுத்தப்பட்டிருக்கப்பட்டதாயும் துவாரங்கள் அற்றதாயும் சுத்தமானதாயும் களிமண் தாவரக்கழிவுகள் போன்றவை அற்றிருத்தல் வேண்டும். போதியளவு கிடைக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும் கொங்கிறீற்றுக்கு பாவிக்கும் கற்கள் (சல்லி) யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் கருங்கற்களையே நொருக்கி அதாவது மலைகளை பிளந்து உடைத்து நொருக்கப்படுகிறது. இயந்திரங்களைக் கொண்டு நொருக்கப்படுவதால் இவை பாவிக்கப்படும் சம அளவுகள் தரம் பிரிக்கப்படுகிறது இதே போன்று யாழ்ப்பாணத்தில முருகைக்கற்களை அனேகமாக கையால் உடைக்கப்படுவதால் அவற்றின் அளவுகள் ஒரே அளவானதாக கிடைப்பது குறைவு கருங்கற்களை (கடினமானகல்) பாவிப்பதால் கொங்கிறீற்வலிமை அடையக்கூடியதாக உள்ளது. இவை மலைகளை உடைத்து நொருக்குவதால் போதியளவு கிடைக்கக்கூடியதாகவும் உள்ளது. கருங்கல்லை யாழ்ப்பாணத்தில் பாவிப்பதற்கு அதன் செலவு அதிகமாகும். ஆனாலும் செலவைக்குறைப்பதுடன் முழுமையான பலத்தை பெறுவதன்நோக்கத்துக்காக விகித அளவுகளையும் முருகைக்கற்களையும் பாவிக்கப்படுகிறது கொங்கிறீற்றுக்கு பாவிக்கப்படும் நொருங்கிய கற்களின் அளவு. (2 1/4 - 55mm) மேற்படாமலும் நன்றாக தரப்படுத்தப்பட்ட கொங்கிறீற்றில் உள்ள சல்லியின் ஆகக்குறைந்த அளவு 1/4" - 8mm. ஆகவும் இருக்கும் ஆனால் வலியுறுத்தல் கொங்கிறீற்றில் பாவிக்கப்படும் (சல்லி) நொருங்கல் கல்லின் அளவு 3/4" - 18mmஆகும். கொங்கிறீற்றின் பலத்திற்குப் நீர் காப்பு தன்மைக்கும் கொங்கிறீற்றில் வெற்றிடம் இல்லாது இருத்தல் வேண்டும். கூடியளவு சிமெந்தையும் பாவிப்பதற்கு இடத்தை அதிகரிக்கும்.

கொங்கிறீற்றில் பாவிக்கப்படும் மணல் இரண்டு வகையான பொலிவுகள் காணப்படுகின்றன. ஒன்று ஈரப்பொலிவு சிறிது ஈரமாக்கப்பட்ட மணல் கனஅளவு தன்சுய அளவைவிட 40%மேலதிகமாக அதிகரிக்கின்றது. எனவே இது கொங்கிறீற்றிலோ அல்லது சாந்திலோ சேர்க்கப்பட வேண்டிய உண்மையான மண்ணின் கன அளவை குறிப்பதால் பொலிவுக்கு ஏற்றபடி மணல் சேர்த்துக் கொள்ள வேண்டும். உலர் பொலிவு மணலை ஒரு பாத்திரத்தில் நிரப்பி தடியினால் குற்றினாள் அதன் மட்டம் கீழ் இறங்கும் தளர்வான வெப்பமட்ட இடம் மணல் தன் சுய அளவை விட கூடிய கனஅளவு உடையதாய் இருக்கும். இக்கூடிய கனஅளவு உலர் பொலிவு என அழைக்கப்படும். எனவே மணல் கொங்கிறீற்றுக்கோ அல்லது சாந்திற்கோ சேர்க்கப்படும் போது இவ்வித பொலிவுகள் கூடியளவு தவிர்ந்து சரியான கனவளவு சேர்ந்த மணல் சேர்க்கப்பட வேண்டும் கூடுதலாக ஆற்றுமணல் பாவப்பது நல்லது.

கொங்கிறீற்றுக்கு பாவிக்கப்படும் நீர் குடிப்பதற்கு தகுந்த நன்நீரையே கொங்கிறீற் வேலைக்கு பாவிக்க வேண்டும். அழுக்கு நீரும் இரசாயன பொருட்கள் கலந்த நீரும் சிமெந்துடன் சேர்த்து கெடுதியைப் விளைவிப்பதால் தடுக்கப்படவேண்டியது அவசியம். கொங்கிறீற் குளைக்கும் போது அதனுடன் சேர்க்கும் தண்ணீரின் அளவு கொங்கிறீற் வேலையில் முக்கியமாகும் கொங்கிறீற் பசை நிலையில் இருக்கும் போது கலந்தால் அது இறுகியதுடன் இருப்பது. அல்லது அதனுடன் கூடியதல்ல எனினும் கொங்கிறீற் கூடிய தண்ணீரின் அளவு அதிகரிக்க கொங்கிறீற் தண்ணீர் தன்மை பசை கூடுதலாக இருக்கும். கொங்கிறீற் தண்ணீர் சீமெந்து பலம் குறைகிறது தண்ணீர் குறைந்தளவு இருப்பதால் கொங்கிறீற் விகிதம் என அழைக்கப்படும் அளவுகள் கொங்கிறீற் தயாரிப்பு வேலைகளுக்கேற்ப விகிதாசாரத்தில் அதாவது கலவை விகிதம் சீமெந்து மணல் கல்லு (சல்லி) நீர் என்பன

| | | |
|---|---|---|
| அரிகில் வேலைக்கு | 1:4:5 | (3/4" - 18mm) |
| லின்ரர் உத்தரம் நிரல் | 1:2:4 | (3/4" - 18mm) |
| அத்திவாரம் | 1:2:6 | (1" - 2" - ) |
| தளங்கள் | 1:2:4: | (3/4" - 18mm) |

நீர் தாங்கிகள் தொட்டிகள் 1:1 1/2:3 (3/4" - 18mm) கையாலோ அல்லது இயந்திரம் மூலமாகவோ கொங்கிறீற்றை குளைக்கலாம். கொங்கிறீற் கையால் குளைக்கும் போது மேடை நீரை உறிஞ்சாது இருக்க வேண்டும். இயந்திரம் கொண்டு குளைக்கும் போது 1: 2: 4 விகிதத்துக்கு 50kg சிமெந்து குளைக்க வேண்டுமாயின் 2 1/2 -3 நிமிடம் வரை இயங்க விட வேண்டும் கையால் குளைக்கும் போது மூன்று தடவை சீமெந்து மணல் கலந்தபின் சல்லி போட்டு மேலும் மூன்று தடவை சல்லி போட்டு மண்வெட்டி சவள் போன்ற கருவிகளினால் கலக்க வேண்டும்.

திணிவு கொங்கிறீற் மெல்லிரும்பினால் வலியுறுத்தப்படாத கொங்கிறீட் ஆகும். எனவே இவை இழுவசையை எதிர்க்கும் சக்தி. அதற்கு இருக்காது அதே நேரத்தில் அனுமதிக்கத்தக்க நெருக்கல் பலத்தை விடக்கூடிய தகைப்பு ஏற்படாதவாறு பார்க்க வேண்டும். இத்தகைய கொங்கிறீற்று அத்திவாரங்களுக்கு இடப்படுகிறது. கொய்வு விசையை எதிர்ப்பதற்காக வேண்டிய இத்தகைய கொங்கிறீற் தடிப்பு கூடுதலாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். மேலும் கொங்கிறிற் உறுப்பின் மீது மையக்கவர்ச்சி சுமை பக்க உழைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அடியில் மைய 1/3 பாகத்திற்கு செல்வதற்காக வேண்டியும் கொங்கிறிற்றின் பருமன் கூடுதலாக இருக்கும் எனவே கலவையில் சீமெந்தின் விகிதத்தை குறைக்கலாம். 2" அல்லது கூடிய அளவு உடைகற்கள் பாவிக்கலாம். மேலும் இடை இடையே பெரிய கற்களை. ஆகக் பெயர்த்தியாக உபயோகிக்கலாம்.

கொங்கிறிற்றின் தன்மைகள் சீமெந்து மணல் சல்லி (கல்) என்பவற்றுடன் தண்ணீர் சேர்த்து குளைத்த பசைத்தன்மையுள்ள திரல் கொங்கிறிற் கலவையாகும். கொங்கிறிற்றின் தன்மையை விரும்பிய எந்த உருவஅமைப்புக்கும் உபயோகிக்கலாம் இது கொங்கிறிற்றின் தனிச்சிறப்பாகும் கொங்கிறிற்றின் பலம் இழுவண்மையில் மிககுறைந்தும் நெருக்கல் பலத்தை இரும்பை ஒத்த பலம் வரைக்கும் செல்கின்றது. இழுவண்மையில் கொங்கிறிற்றின் பலம் மிக குறைவானமையினால் இழுவிசையோடு உறுப்புகளுக்கு கொங்கிறிற்றை தனித்துப் பார்க்க கூடாது கொங்கிறிற்றின் நிறை கன அளவுக்கு 140 இருந்து 150 இறாத்தலாகும் எனவே மரப்பெட்டிகளின் (மால் வேலை) மேல் கொங்கிறிற்றை போடும் போது இதன் பலத்தை தாங்கக்கூடியதாக பலம் உள்ளதாக (மால் வேலை) பெட்டிகளை அமைக்க வேண்டும். நீடிக்கும் தன்மை. நல்ல முறையில் குளைக்கப்பட்ட கொங்கிறிற்றின் காலம் முடிவற்றதாகும். சிறந்த முறையில் கொங்கிறிற்றை தயாரிப்பதன் மூலம் நீர் காப்பு கொங்கிறிற்றைப் பெறலாம் கொங்கிறிற் ஆனது ஒரு குறிப்பிட்ட நேரத்தின்பின் இத் தொகுதியானது இறுகத் தொடங்கும். இவ் இறுகல் ஆரம்ப இறுதி இறுகல் எனப்படும். ஆரம்ப நிகழ்வு எடுக்கும் நேரம் இறுதி இறுகல் நேரம் தொடக்க இறுதி நேரத்துக்கு முன்னே கொங்கிறிற்று ஆனது வார்ப்பி மால் (வேலையில்) போடப்பட்டு இறுக்கப்பட வேண்டும். 1: 3: 6 (50mm) என்ற விகிதத்திலுள்ள திணிவு கொங்கிறிற்று அதிக அமுக்கப்பலத்தை கொண்டதாகவும் இவை அத்திவாரம் அணைக்கட்டு போன்றவற்றின் அடித்தள கொங்கிறிற்றாகவும் பயன்படுகிறது. கொங்கிறிற் ஆனது அதனுடைய காலத்தைப் பொறுத்தே கூடிய வலிமையை கொண்டுள்ளதால் இது தற்கால நிர்மான வேலைகளுக்கு பெரும் அளவில் பயன் படுத்தப்படுகிறது. ஆனால் குறைந்தளவு இழுவைக்கு உட்படுத்தப்படுமாயின் உடைவு ஏற்படும். கொங்கிறிற்றின் சேர்மானம் (கலவை) இயந்திரத்தின் மூலம் குறைக்கப்படுவதால் சரியான முறையில் சேர்க்கப்படும் உடன் கொங்கிறிற்றின் இயல்புகள் வேலை செய்யும் திறன் ஒட்டும் தன்மையற்றநிலை திண்மப்படுத்தும் நிலை நகரும் தன்மையில் தங்கியுள்ளது.

கடினமான கொங்கிறிற்றின் இயல்புகள் வலிமை பாவனை ஊடு புகவிடு தன்மை குறைவான சுருக்கம் வெப்பத்தடை போன்றவைகளிலும் தங்கியுள்ளது. பெரிய அளவிலான கொங்கிறிற் வேலை தளத்தில் கையாளும் போது அதிர்வினால் ஓர் உறுதியான திரளையாக இல்லாமல் இருப்பின் ஒட்டும் தன்மையை அற்ற நிலையில் உள்ள தென்போம். குறிப்பாக உயரமான மால் வேலையினுள் கொங்கிறிற்றின் உற்றப்படும் போது உயரத்தின் காரணமாக பெரிய அளவு துணிக்கை அடியினும் சீமெந்து மேற்பகுதியிலும் அடைந்து காணப்படும். இப்படியான முறை விரும்பத்தக்கதல்ல சரியான தரப்படுத்தல் கொங்கிறிற்றின் இப்பிரிவு நிலையை தடுக்கலாம். வார்ப்பு அல்லது மாலினுள் ஊற்றப்படும் போது சல்லிகளுக்குப் இடையே உள்ளகாற்று இடைவெளிகளை தவிர்க்கும் பொருட்டே கொங்கிறிற் திண்மைப் படுத்தப்பட வேண்டும். கொங்கிறிற் மாலினுள் ஊற்றப்படும் போது வலியுறுத்திகளின் (கம்பிகளின்) மூலைகளுக்கு மேல் எப்படி கொங்கிறிற் செய்கிறது என்பதை நகரும் தன்மை எனவுப்படும்.

வலியுறுத்தற் கொங்கிறிற் சாதாரண கொங்கிறிற்றுள் எந்தவிதமான இரும்பு பொருட்களையும் நாம் இரும்பை பரிசோதனை செய்து பார்ப்பதில்லை அதே போன்று சீமெந்தும். இவற்றை தொழிற்சாலை பரிசோதனையின் பின்னரே வெளியிடப்படுகின்றது. இதனால் நாம் பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இவ் பொருட்களுக்கு இல்லை. ஆனால் கொங்கிறிற் நாங்கள் பரிசோதனை செய்த பின்னே பாவிக்க வேண்டும். இரும்பு பரிசோதனை. தொழிற்சாலையில் 100 கம்பிகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில் பரிசோதிக்கப்படுகிறது. சீமெந்தும் விகிதாசாரத்திலும் (அளவுகள்) அரைக்கும் திறன் என்பனவற்றில் இருந்து பரிசோதிக்கப்பட்டே வெளியிடப்படுகிறது என்பது நாம் அறிந்திருக்க வேண்டியதாகும்.

கம்பிகளை வைத்து கொங்கிறிற்றை வார்க்கும் போது வலியுறுத்திய கொங்கிறிற் எனப் பெயர் பெறும் எந்த வடிவான உருக்கு வகையோ வட்டம் சதுரம் தட்டை கோணம் Tவடிவம் I வடிவம், Z வடிவங்களையும் கம்பிப்பின்னல்களையும் பாவிக்கலாம் ஆனால் கொங்கிறிற் துருப்பிடித்த அழுக்குள்ள கம்பிகளில் பிடிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓட்டிக்) கொள்ளாது எனவே கம்பிகளை துப்பரவு செய்து தேவை ஏற்படும் போது சீமெந்து தண்ணீரினால் கழுவி பாவிக்கப்படவேண்டும். வலியுறுத்திய கொங்கிறிற் பாவிக்கப்படும் இடங்களில் சில அத்திவாரங்கள் வளைகள் வின்ரர்கள், தகட்டுக், கூரைகள், மாடிப்படிகள், பாலங்கள், சாலைகள், அணைக்கட்டுகள் நிரல்கள், பலமாடிக்கட்டடங்களுக்கான தளங்கள் இப்படியாக இனனும் பல இடங்களில் வலியுறுத்தல் கொங்கிறிற் பாவிக்கலாம். கொங்கிறிற்றுக்கான பரிசோதனை கூம்பு சோதனை. இச் சோதனை செய்வதன் நோக்கம் பலமானகட்டடமாக இருக்கவேண்டும் சோதனை செய்வதன் முக்கியக் நோக்கம் இலாபமே இதற்காகவும் பரிசோதனை செய்யவேண்டும். இதற்கு பொறியியளாலர்கள் தேவை. சிறந்த முறையிலும் செலவைக்குறைத்து பணத்தை மீதப்படுத்தவே என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். உலக நாடுகளில் அமெரிக்கா, லண்டன் போன்ற நாடுகள் பணக்கார நாடாக விளங்கக் காரணம் அந் நாடுகளில் பரிசோதனை முக்கியம் பெறுகின்றது இதனால் பணம் மீதப்படுத்தப்படுகிறது. எப்படி யென்றால் எமது நாட்டை எடுத்துக்கொண்டால் கொங்கிறிற் சோதனை குறைவு. நாம் சோதனை செய்யாமல் கொங்கிறிற் வேலையை செய்வதால் அளவுக்கு அதிகமான சீமெந்து மணல் சல்லி என்பனவற்றை தேவையில்லாமல் நிர்மானத் திட்டத்து (Design) க்கு மேலாக. கம்பிகளையும் போடுவதால் நாம் மேலதிக கட்டடம் பொருட்களை காணக்கூடியதாகயுள்ளது. கொங்கிறிற்ரை (Design) க்கு அளவை போடும் போது மேலதிக செலவு குறைந்து பணம் மீதப்படுகின்றது. இதனால் பொறியிலாளர்களின் முக்கியத்துவமும் நாட்டின் முன்னேற்றம் காணப்படும். கொங்கிறிற்றின் தரம் அதனுடைய வலிமையிலே தங்கியுள்ளது 150mm x 150mm x 10mm கனக்குற்றி உடைய கொங்கிறிற் கலவை யொன்றை உண்டாக்கி 28நாட்களில் பின் அக்குற்றியை உடைக்கத் தேவையான வலு கனவலிமை எனப்படும் இலங்கையிலும் லண்டனிலும் 1881ல் Britist Standard முறையினால் அளக்கப்பட்ட கனவலிமை முறையே கையாளப்படுகிறது.

கூம்புசரிவுச் சோதனை. கூம்பு சோர்வு வீழ்ச்சியை அறிவதன் மூலம் கொங்கிறிற்றின் அளவை ஒப்பிட்டு பார்ப்பதுடன் கலக்க வேண்டிய நீரின் அளவையும் கட்டுப்படுத்தலாம் இப்பரிசோதனை சோர்வு அளக்கும் கூம்பின் மூலம் Slumb Cone மூலம் கணிக்காலம் கூம்பின் கீழ் மேல் விட்டங்கள் 100mm, 200mm ஆகவும் உயரம் 300mm ஆகவும் இருக்கும் கூம்பின் பக்கங்களின் கைபிடிகள் உண்டு தயாரித்த கொங்கிறிற். கலவையை 75mm உயரத்துக்கு இட்டு Tamping rod 600mm நீளமும் 16mm விட்டமும் கொண்ட தண்டினால் இறுக்க வேண்டும் இவ்விதம் 4தடவை இட்டு இறுக்க வேண்டும் இக்கூம்பினை செங்குத்தாக உயர்த்தி வெளியே எடுக்கப்படும். கொங்கிறிற் ஆனது சரியும். விளிம்பில் மட்டப்பலகையை வைப்பதன் மூலம் மேல்மட்டம் அறியப்படும். கொங்கிறிற் ஆனது சரித்த உயரத்துக்கும் மேல்மட்ட உயரத்துக்கும் இடைப்பட்ட உயரத்தை அறிதல் வேண்டும் இவ் உயரமே சரிவு வீழ்ச்சி ஆகும். இது mmரில் அளக்கப்படும் இது பரிசோதனை செய்யப்படும் நோக்கம். பலமுறை கலக்கப்படும். கொங்கிறிற்றின் நீரின் அளவைக் கட்டுப்படுத்தலாகும் மேலும் கொங்கிறிற் அமைப்புக்குள் தொடர்ந்தும் கொங்கிறிற் இடுவதாக இருந்தால் கொங்கிறிற் சோர்வு ஒரே அளவாக இருக்க வேண்டும். இவ்வீழ்ச்சியானது வேறுபட்டால் இருக்கும் நீரின் அளவுக்கு வேறுபடும் இதனால் கொங்கிறிற் வலு பெருமளவு பாதிப்படையும் இதை தவிர்த்தல் அவசியம். இதுவே கூம்பு இறங்கல் அல்லது சோர்வு அல்லது சலியல் சோதனை கொங்கிறிற் வலுவை அறிவதில் முக்கியத்துவம் பெறுகிறது. ✡

**வை. சத்தியராஜா.**
குடிசார் எந்திரவியல் 3ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**BOARD OF EXQUTIVE MEMBERS**

SITTING - (L—>R)

T.KUNASUTHAN(Treasurer)
N.SUTHAKAR(President),
K.VINSON(Secretary)
T.VIMALAN(Sub-Pre),
B.BALAMURALI(Sub-Pre),
M.ANTONCHARLES(Vice-Pre),
K.KEERTHIKANESHAN(Sub-Pre),

S.S.POORANAMPILAI(Sinior Treasurer),
K.JEYARATNAM(Principal),
M.VIKNESHWARAN(Vice - Principal),
P.MAHENTHARAN(Editor),
N.PIRAPAKARAN(Sec.of Sports),
V.SENTHAN(Sub-Pre)
T.YASOTHARAN(Vice-Sec)

**எமது பணிப்பாளருக்கு மகஜர் வழங்கப்பட்ட போது**



K. ஜெயரட்ணம் ( அதிபர்) ,N. சுதாகர் (தலைவர் ) T. யசோதரன் (உபசெயலாளர்)
K. கஜேஆராட்சி (பணிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுமுறையில் வீடு நோக்கி..........

ஆதவனின் மனைவி தந்தியுடன் ஓடி வருகிறாள். "அத்தான்" "அத்தான" வந்துப்பாருங்கள் உங்களுக்கு தந்தி வந்திருக்கின்றது. உள்ளே இருந்து வந்தவன் தந்தியை வேண்டிப்பார்த்தான். கைகள்படபடத்தன. கண்ணிலிருந்து துளிகள் பொட்டுப் பொட்டென்று விழுந்தன. ஆமாம் ஆணந்தக்கண்ணீர்தான். அவன் கனவுகள் நிளைவாகப் போகின்றது. விடிவுகாலத்திற்கு அழைப்புவந்துவிட்டது. ஆதவனின் நிலைமையைக்கண்டு மனைவி பொன்னி ஒன்றும்புரியாமல் வியப்புமேலிட்டாள். அவனையே பார்த்தவாறு நின்றிருந்தாள். ஆதவன் தந்தியை வாசித்துக்காட்டினான். சுவீடனில் லேபர் வேலைக்கு தெரியப்பட்டு இன்னும் ஆறுநாட்களில் கணவனைப் பிரியப் போன்றோம் என்ற கவலை ஒரு பக்கம். அவன் திரும்பி வரும்வரை தானும் ஏழு பிள்ளைகளும் தவித்து வாழ போகின்றோம் என்ற ஏக்கம் மறுபுறம் விக்கி விக்கி அழுதாள். ஆதவனிற்கு அவளின் அழுகைக்கான காரணம் புரிந்து விட்டது. அவளை அப்படியே அணைத்து அம்மாடி நீ அழுதால் எப்படி, நம் கஷ்டம் உனக்கு தெரியாதா இரண்டு வருடங்கள் தானே பறந்தோடிவிடும் பணத்தோடு நானும் பறந்துவந்து விடுகின்றேன். நம்கஷ்டங்களும் பறந்துவிடும் மற்றவர்களோடு நாமும் வசதியோடு மனிதர்களாக வாழலாம். அவள் கண்களை துடைத்துவிட்டாள். அப்போதைக்கு அவளும் அவன் வார்த்தையில் ஆறுதல் அடைந்தாள். ஆதவன் வேகமாக இயங்குகின்றான். அங்கே இங்கே ஓடி பாஸ் எடுத்து பயணத்திற்கு வேண்டிய ஒழுங்குகளைக் செய்து மனைவியிடமும் பிள்ளைகளிடமும் கலங்கிய கண்களுடன் குமுறிய நெஞ்சுடனும் விடை பெற்று யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலிப்பாதையூடாக கஸ்டப்பட்டு கொழும்பு வந்து ஏஜென்சியிடம் சென்று விமான்ரிக்கட்டுக்களையும் வேலைக்கான ஏனைய உத்தரவு பத்திரங்களையும் பெற்றுக்கொண்டு அவனுடன் சேர்ந்து நாடு விட்டு நாடு தேடிச் செல்லும் பதினெட்டு பறவைகளுடன் விமானநிலையத்தை அடைந்து இதோ பறந்து கொண்டு இருக்கின்றான்.

அவனை இல்லை அவன் உடலை விமானம் சுமந்து செல்ல அவன் நினைவுகள்யாவும் மனைவி பொன்னியையும் அருமைச் செல்வங்கலையும் சுற்றி வட்டமிட்டன. என் ஆசை மனைவியையும் அருமைக் குழந்தைகளையும் விட்டு வந்துவிட்டோமே. நாமாகத் தேடிக்கொண்ட கஸ்டங்கள் இவைகள். ஆசையின் மயக்கம் செய்த வேலைதானே இவைகள். அறியாத பருவத்தில் முதிராதவயதில் காதலித்து திருமணத்தை செய்து வத வதவென்று வருடம் ஒரு பிள்ளை பெற்று ஏழாகப் பெருக்கி விட்டு கையில் உள்ள சொற்ப பணத்தையும் அரசாங்க கடனாகப் பெற்ற கடனையும் வைத்து புது வீடு கட்டத்தொடங்கி ஆசையின் உந்தலில் பெரியவீடாக உருவெடுத்து கடனும் தூக்கமுடியாத சுமையாக உருவெடுத்து சிறிய அரசாங்க உத்தியோகத்தில் இருந்தவனுக்கு விலைவாசியினால் அன்றாட வாழ்க்கையைக்கூட ஓட்ட முடியாதவனாய்த் திண்டாடினான். கடன்கள் ஒன்று சேர்ந்து பைத்தியக்காரன் போல் ஒன்றும் புரியாதவனாக தலையைப்பிய்த்துக்கொண்டு அலைந்தான். கடன்வட்டி வளந்து பத்து இருபதாக இருபது முப்பதாக கடன்காரர் அவனைத்துரத்தத் தொடங்குகின்றார்கள். ஓடினான் அவர்கள் விடுவதாக இல்லை. நின்று யோசித்தான். ஒரு வழியும் இல்லை. வீட்டைவிற்க வேண்டியது தான் என்ற ஒரே மனதுடன் முடிவெடுத்தான். வீட்டை விற்க அலைந்தான். அவன் கஸ்டகாலம் நாட்டின் பிரச்சினை காரணமாக வீட்டின் பெறுமதியின் பாதிவிலை தான் கேட்டார்கள். அவனுக்கு தெரிந்த பணக்காரர் ஒருவர் விலைக்கு ஒருபாதியைக் கொடுத்து மிகுதியை ஈடாக அவன் காணியை எழுதிக் கொண்டான். கடன் கொடுக்க வேண்டியவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டியதில் பாதியைக் கொடுத்து சிறு தொகையை வைத்து சிறு வியாபாரம் செய்தான்.

அனுபவம் இல்லாத வேலை. கையில் உள்ளதும் போய் ஈற்றில் கடன் தான் மிஞ்சியது. இப்படியே காலம் ஓடியது. வீட்டுக்கு ஈடாகப் பணம் கொடுத்தவன் துரத்தினான். ஓடினான் துரத்தினான் ஓடினான். வெளிநாட்டுக்கு ஆட்களை எடுக்கும் ஏஜென்சியிடம் ஓடினான் அங்கேயும் அவர்கள் விடவில்லை. பேதம் பேசுகிறார்கள் பத்தாயிரம் ரூபாய் தந்தால் உதவுவதாகச் சொன்னார்கள் . திரும்பி ஓடிவந்தான். மனைவியின் காதில் கழுத்தில் உள்ளதை எல்லாம் விற்றுக் கொடுத்தான். அதன் பயன் தான் இதோ பறந்து கொண்டு இருக்கின்றான். விமானம் தரையை நோக்கி இறங்கத் தொடங்கப் போகின்றது. எல்லோரும் இருக்கையிள் பாதுகாப்புப்பட்டியை பூட்டிக் கொள்ளுங்கள் என்ற விமானப்பணிப்பெண்ணின் குரல் அவன் சிந்தனையைக்கலைத்தது. சுவீடனில் வந்து இறங்குகின்றான். ஒரு வசதியான கம்பனியில் அவனுக்காகக் கிடைத்த வேலையில் பணியாற்றத் தொடங்குகின்றான். இருப்பிடவசதிகளும் கிடைத்தது. அவன் நினைத்ததிலும் பார்க்க கடுமையான வேலை பன்னிரண்டு மணித்தியாலங்கள் இடைவிடாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு ஓடாக உழைத்தான். அவனுடன் வந்தவர்களில் பாதிப் பேர் வேலையின் கொடுமை தாங்காமல் அதை இதை சாட்டுச்சொல்லி நாடு திரும்பி விட்டனர். அவனின் கடன் கஸ்டம் திரும்பிப் போக முடியவில்லை. கஸ்டத்தை துச்சமாக மதித்து உழைத்தான். அவன் கடும் உழைப்பும் உடம்பின் மெலிந்த தோற்றமும் அவன் மேலதிகாரிகளுக்கு அவன் மேல் அனுதாபத்தை உண்டாக்கியது. ஊதியத்தில் உயர்வு கிடைத்தது. மனைவிபிடமிருந்து மாதம் இரண்டு கடிதங்கள் வரும். அவனுக்கும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் கடிதம் எழுதுவான். கடிதங்கள்தான் அவனுக்கு ஆறுதல். காலம் ஓடியது கஸ்டங்கள் கடன் தொல்லைகள் சிறிது சிறிதாக மறைந்தது. இரண்டு வருடங்கள் மறைந்தன. அடுத்த மாதம் அவனுக்கு விடுமுறை பிள்ளைகளுக்கும் மனைவிக்குமான அவன் ஆசைபட்டு எவ்வளவோ பொருட்கள் எல்லாம் வேண்ட நினைத்தான். இராணுவத்தின் கெடுபிடிகளையெல்லாம் நினைத்துப்பார்த்தான். இரத்த வியர்வை சிந்தி கஸ்டப்பட்டு உழைத்தவையல்லவா. அத்தனை பொருட்களும் பறிமுதலானால் சிந்தித்தான் இருந்தும் ஓரிரு பொருட்களை யென்றாலும் வேண்டினான். இன்னும் ஒருமாதம். அடுத்தமாதம் தன் மனைவியுடனும் பிள்ளைகளுடனும் ஆனந்தமாக தன்கனவுகளை யெல்லாம் நினைவாக்கப்போகின்றான். ஒரு மாதம் ஒரு யுகமாக நகர்ந்தது. ஆமை வேகத்தில் நகர்ந்த நாட்களை ஒவ்வொன்றாக எண்ணினான். ஒரு மாதம் ஏன் இப்படி நகர்கின்றது. அவனுக்கு புதிராக இருந்தது இரண்டு வருடங்களும் எப்படித் பறந்தது. இந்த ஒரு மாதமும் போக மறுக்கின்றதே உலகமே இயங்காமல் ஸ்ரைக் பண்ணி விட்டதோ? நிமிடங்கள் மணித்தியாலமாக மணித்தியாலங்கள் நாட்களாக நாட்கள் மாதங்களாக ஓடவில்லை. தவித்தான் தவித்தான் அவன் இப்போது சுவீடனில் இல்லை. உடல் தான் இங்கே நினைவுகள் எல்லாம் மனைவி குழந்தைகளையே வட்டமிட்டது அந்த ஆழ்ந்த நினைவுகளுடன் ஆழ்ந்து தூங்கிவிட்டான். ✡

ம. அன்ரன் சாள்ஸ்
R. E. M. II


# நல் வாழ்த்துக்கள்

# கயல்விழி நகைப் பூங்கா

தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஆடர்நகைகள் 22கரட் தங்கத்தில் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

224 / B, Kasthuriar Road,
Jaffna.

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்கப்படக்கூடிய முன்னுரிமைப் பங்குகளை மீட்டல்

முன்னுரிமைப் பங்குகள் என்பது ஒரு பொதுக்கம்பனியால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் பங்குகளில் ஒன்றாகும். முன்னுரிமைப் பங்கிற்கு இலாபமானது முற்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு இருப்பதனாலேயே இதனை முன்னுரிமைப் பங்குகள் என அழைப்பர்.

உதாரணம் : 7% ஆன 5000 முன்னுரிமைப் பங்குகள்.
ஒரு சாதாரண பங்கு ஒன்றுக்கு காணப்படும் சலுகைகள், மேலதிக நன்மைகள் போன்றவை ஒரு முன்னுரிமைப் பங்கிற்கு காணப்படமாட்டாது. முன்னுரிமைப் பங்குகள் பல வகைப்படும். அவையாவன,

1. திரண்ட முன்னுரிமைப் பங்கு
2. திரளாத முன்னுரிமைப் பங்கு
3. மீட்க்கப்படக் கூடிய முன்னுரிமைப் பங்கு
4. மீட்க்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்கு
5. பங்கு கொள்ளும் முன்னுரிமைப் பங்கு

என வகைப்படும்.

(இவற்றில் மீட்க்கப்படக் கூடிய முன்னுரிமைப் பங்குகளைப் பற்றி கணக்குச் செய்முறைகளுடன் கீழே பார்ப்போம் )

### மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளும் அவற்றை மீட்புச் செய்தலும்:

மீட்க்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் முன்னுரிமைப் பங்குகளில் ஒரு வகையாகும். இவ் வகைப் பங்குகளை மீட்க்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் என்று அழைக்கக்காரணம் இவ்வகைப் பங்குகள் விநியோகிக்கும் போதே இவை மீட்கும் காலம் முற்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு இருப்பதனால் ஆகும்.

இம் முன்னுரிமைப் பங்குகளை மீட்க்கும் போது அதற்கு காரணமாக அமைவது.

பங்குவழங்கலின் போது குறிக்கப்பட்ட காலத்திற்கு அமைவாகவோ அல்லது கம்பனியின் விருப்பத்தின் பேரிலேயோ அது மீட்க்கப்படலாம்.

இப் பங்குகளை மீட்டல் தொடர்பில் பின்வருவன கவனிக்கப்படவேண்டும்.

❒ கம்பனி ஒன்று பங்குகளை மீட்கும் போது மீட்புத் தொடர்பான விபரம் கம்பனியின் அகவிதியில் விபரமாகக் குறிப்பிடப் படவேண்டும்.

❒ மீட்க்கப்படும் பங்குகளின் பெறுமதிகள் முழுவதும் அழைக்கப்பட்டதாகவும், முழுவதும் இறுக்கப்பட்டதாகவும் (அதாவது முழுவதும் பெறப்பட்டதாகவும்) இருக்க வேண்டும்.

❒ இவ்வாறு முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்யும் போது சிலவேளைகளில் மேலதிகமாகப் பணம் கொடுத்து மீட்க்கப்படும். இவ்வாறு மேலதிகமாகக் கொடுக்கப்படும் தொகையை மீட்பு வட்டம் என்பர். இம் மீட்பு வட்டமானது பங்கு வட்டக் கணக்கில் இருந்தோ அல்லது இலாப நட்டக் கணக்கின் (செலவுமீதி) பகிரப்படாத தொகையில் இருந்தோ மீட்க்கப்பட்டு பதிவழிக்கப்படும்.

❒ கம்பனி ஒன்று மீட்க்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்யும் போது( அதன் முகப் பெறுமதியைமட்டும்) அதன் முழுப்பெறுமதிக்கும் சாதாரண பங்குகளை வழங்குவதன் மூலமாகவோ அல்லது இலாபத்தில் இருந்தோ மீட்டுக் கொள்ளலாம். இலாபத்தில் இருந்து முன்னுரிமைப் பங்குகளை மீட்கும் போது பங்கு இலாபமாக இலாபநட்டக் கணக்கின் ஊடாக பகிர்ந்து வழங்கக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமான ஒதுக்கங்களான பொது ஒதுக்கங்கள் போன்றவற்றைப் பயன் படுத்தி மூலதன மீட்பு ஒதுக்க நிதி உருவாக்கப் படவேண்டும்.

இம் மூலதன மீட்பு ஒதுக்க நிதியானது உபகாரப் பங்குகளை வழங்குவதற்கும், மூலதனக் குறைப்பை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்படலாம்.

**முன்னுரிமைப் பங்குகளை மீட்டல் தொடர்பான நாட்குறிப்பு பதிவுகள் பின்வருமாறு.**

1. மீட்கும் முன்னுரிமைப் பங்கினது பெறுமதியை மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்கு மூலதனக் கணக்கில் இருந்து பங்கு மீட்புக் கணக்கிற்கு மாற்றப்படும் போது,
   மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்கு மூலதனக் க/கு வரவு
   பங்கு மீட்புக் க/கு செலவு

2. மீட்கப்படும் முன்னுரிமைப்பங்குகள் வட்டம் கொடுத்து மீட்கப்படுமானால் அவ் வட்டம் மீட்பு வட்டம் எனப்படும். இவ் மீட்பு வட்டமானது பங்கு வட்டக் கணக்கில் இருந்தோ அல்லது இலாப நட்டக் கணக்கில் இருந்தோ பதிவழிக்கப்பட வேண்டும். அப்போது பதிவு
   பங்கு வட்டக் கணக்கு / இலாப நட்டக் கணக்கு வரவு
   பங்கு மீட்புக் கணக்குச் செலவு

3. மீட்புச் செய்யும் போது முன்னுரிமைப்பங்கு மீட்புதாரருக்கு காசு அல்லது காசோலை கொடுக்கும் போது.
   முன்னுரிமைப் பங்கு மீட்புக் கணக்கு வரவு
   காசுக் கணக்கு / வங்கிக் கணக்கு செலவு

4. இலாபத்தில் இருந்து அதாவது ஒதுக்கங்களில் இருந்து பங்குகள் மீட்கப்படுமாயின் மூலதன மீட்பு ஒதுக்க நிதி உருவாக்க வேண்டும். அப்போது பதிவு
   குறிக்கப்பட்ட ஒதுக்கக் கணக்கு வரவு
   மூலதனமீட்பு ஒதுக்க நிதிக்கணக்கு செலவு

**உதாரணம் 1**

